ப முதலியார் ப

சுப்பிரமணிய துணை.

சென்னை ஸ்ரீ பாலவிநோத நாடக

இன்னும் பல நாடக கம்பெனியார் நடத்தியாரும்,

ச. சு. சங்கரலிங்க கவிரா ,

டன்

T. R. வெங்கடேசன் இயற்றிய

ஸ்ரீவள்ளித் திருமணம்

ஜலக்ஷிமி - வள்ளி (ரிஜிஸ்டர் காப்பிரைட்) 1932



பதில். P. T. நாகபூஷணம் நாயகர் விலை அணா-4.

ண்ணப்ப முதலியார்

பப்ப நாயக்கன் தெருவு, சென்னை.

O-,3MYN92,S
N32
149658

திருச்செந்தூர ஆண்டவன் துணை

[சரபகவி உடுமலை ஸ்ரீமத் முத்துசாமி கவிஸ்வரர் அவர்க களின் அருமை மாணவரான குவலயம் எங்கும் செல்வாக்குடைய சென்னை ஸ்ரீ பாலவினோத நாடக சபைக்கும் ஆரியபாலகான சபைக்கும் சர்வ அதிகார தலைமை ஆசிரியராய் விளங்கும் சரபகவி ஸ்ரீலஸ்ரீ ச. சு. சங்கரலிங்ககவிராயர் அவர்களின் அருமை மாணவனும் முத்தமிழ் க்ஷேத்ரவித்வான் K. S. விநாயகமூர்த்தி கவிராயர் அவர்களின் தலைமை மாணகனுமான ஆரியகான சபை அயன் ராஜபார்ட் சந்தச் சரபம் சக்கச்செந் தமிழ் சங்கீதபாஸ்கரன் ஸ்ரீமான் திருச்செந்தூர் சக்ரவர்த்தி] T. R. வெங்கடேசன்

வேலன் — வேடன் — விருத்தன்

ஸ்ரீ வள்ளித் திருமணம்

தென்னிந்தியாமேடை யுவராணி ஸ்ரீமதி.

T. R. ராஜலக்ஷிமி - வள்ளி

சங்கீதகான-மிஸ். P. T. நாகபூஷணம் நாரதர்

நூலாசிரியர்

ராஜபார்ட் திருச்செந்தூர் சக்கரவர்த்தி

ஸ்ரீமான் **T. R. வெங்கடேசன்**

அவர்களால் இயற்றப்பட்டதை.

கன்னிப்பத்தூர்- கண்ணப்ப முதலியார்

அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1932. [விலை அணா 4.

உ

சிவமயம்

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்ற யாவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

ஸ்ரீமான் சரபகவி ஸ்ரீலஸ்ரீ ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் மாணவர் **T. R.** வெங்கடேசன் அவர்களால் நூதனமாய் இயற்றிய ஸ்ரீ வள்ளித்திருமணம் என்னும் டிராமாவை சென்னை நைனியப்ப நாய்கன் தெரு 1/34 வது நெம்பர் கடையில் இருக்கும் கன்னிப்புத்தூர் - கண்ணப்ப முதலியார் ஆகிய நான் ஷை யாரிடம் சுத்தக்கிரயத்திற்குப் பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தி இருப்பகால் ஷை ஸ்ரீ வள்ளித் திருமணம் டிராமாவை யாதாமொருவர் அச்சிடுவாரேல் 1887௵த்து 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின் விதிப்படியான் கோறும் நஷ்டத்திற்கும், பினல் கோர்ட்டு செக்ஷன் குற்றத்திற்கும் உத்திரவாதிகளாக வேண்டுமென்பதை கவனிக்கக்கோருகிறேன்.

இப்படிக்கு,

கன்னிப்புத்தூர் - கண்ணப்ப முதலியார்.

நாடக பாத்திரங்கள்.

(1) நம்பிராஜன் - சிற்றூர் அரசன்

(2) நங்கைமோகினி - நம்பிராஜன் மனைவி.

(3) எமக்காதகன்
(4) எலிமூஞ்சி சிங்கன்
(5) எரிமூஞ்சி கருப்பன்
} நம்பிராஜன் புதல்வர்கள்

(6) வள்ளிநாயகி - - மான் வயிற்றில் உதித்த
[வள் நம்பிராஜனின் ஸ்ரீகாரபுதல்வி

(7) வேலன்
(8) வேடன்
(9) விருத்தன்
} பரமசிவனின் கனிஷ்ட புத்திரர்

(10) நாரதா - - பிர்மாவின் ஜேஷ்ட புத்திரர்

(11) விநாயகர் - பரமசிவனின் ஜேஷ்ட புத்திரர்

மற்றும் குடிகள்—தோழிகள்— வேடர்கள் முதலானோர்

நாடகம் நிகழிடம்.

கழுத மலையிலும் சிற்றூருக்கடுத்த தினைப்புனத்திலும்

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

திருமுருகனின் திருவிளையாடலாகிய

வள்ளி திருமணம்

விநாயகர் துதி வெண்பா

அல்லல் போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிறந்த
தொல்லை போம் போகாத்துயரம் போம் - நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்கும் செல்வக்
கணபதியைக் கைதொழுதக் கால்

விநாயகர் துதி

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

ஆனை முகமாய் விளங்கும் ஐயா உன்னை
அண்டி யாங்கள் போற்றிசெய்தோம் மெய்யா (ஆனை)

அநுபல்லவி.

ஆதரித்து அருள்புரிவாய் அண்டிவந்த பாலகர்களை
ஐயா அருள்மெய்யா (ஆனை)

சரணம்.

நீலகண்டன் பெற்றெடுத்த பாலா அம்மை
நீலி கபாலிக் கனுகூலா (ஆனை)

நித்தியமும் போற்றிசெய்தோம் நீலமேக
ஸ்யாமள சொரூபா விக்னரூபா (ஆனை)

அறுமுகனுக்கு மூத்த பாலா அந்த
ஆதி திருமாலுக்கனுகூலா
பக்தியுடன் வள்ளிசரிதை பார்க்குடனே எழுதினேனே
என்னைக்காரும் கலிதீரும் (ஆனை

சீன் 1.] [இடம் சித்தூர்நாடு தர்பார்.]

நபர்: நம்பிராஜன்.—நம்பிராஜனின் மைந்தர்கள்: குடிகள்:

நம்பிராஜன் சிம்மாசனத்திற்கு வருவது.

வண்ணச்சிந்து

பாரெங்கும் பெருறும் சரபம்
பழணிப்பதி மாம பழச்சரபம்
பேர் தங்கும் கனிமலைச் சரபம்
பேசும் தமிழ் மழைபொழி சரபம
நிலவும் புகழ் இந்திய பூமி
நேயம் பெறும் மதுரிதநேமி
குலவும் பல நாடகநேமி
குருவே உடுமலை முத்துசாமி
சுகமேதரும் கலைமலைகள் வாசா
துணை சங்கர தாஸ விலாசா
ஜெகமேதுதி புலவர்கள் நேசா
சரணம் சர பக்கவிராஜா
ஞானம் பெறும் ஆரிய பாலா
கானச் சபை மேவிய சீலா
தியானம் புரி சங்கரலிங்கம்
தனதோர் குருவாக விளங்கும்.

(நம்பி வசனம்) மைந்தர்களே! கல்யாணி, அமர்வீர்கள். மைந்தர்கள் நம் ஆக்கினைக்குட்பட்ட குடிகள் யாவரும் நமது குல தெய்வமாகிய கழுகுமலைக் கந்தனின் அருளால் அநுதினமும் சுகானுபோகமாய் ஜீவித்து வாழ்ந்து. வருகின்றனரா ?

(புத்திரர்கள் வசனம்) பிதா ! தாங்களின் செங்கோல் முறைக்கு யாங்கள் என்னபதிற் சொல்லுவோம் ஹா ஹா நம் தேசத்தில் வாழுப் பிரஜைகள் நம்மைப் போலவே ஒவ்வொருவரும் நம் துதிக்கும் குல தெய்வமாகிய கழுகாசலக் கந்தனை அல்லும் பகலும் அறுபது நாழியும் சதா கந்தனையே போற்றிசெய்து அதிக செல்வாக்கும் நல்லொழுக்கமாய் வாவ்ந்து வருகின்றனர்.

(நம்பி வசனம்) ஹா ! ஹா ! மிக்க சந்தோஷம்

(ஊரில் துஷ்டமிருகங்கள் புகுந்து பயிர்களை அழித்து விட்டதால் குடிகள் கூச்சலிட்டுக்கொண்டு அரசனுடைய சபைக்கு வருதல்)

பட்டு வதுந்தன தேரேபிச்சாரிய என்ற மெட்டு.

கேளுமையா எங்கள் மன்னாதி மன்னரே
சாற்றுவோம் எங்கள் குறைதீருமையா
வருடம்வருடம் கப்பப்பணத்தை ஐயா
இவ்வருடம் கட்டமாட்டோ மையா
தாஷடீகமாய் காட்டில்வாழும் மிருகமையா
தான்ய பயிர்எல்லாம் அழித்ததையா [தின்றதையா
வீட்டுவாயற்படியில் கட்டிடும் கன்றுபசு ஒன்றையும்விடாமலே புலி
வீரியமாய்வந்து புலிகரடிசிங்கம் தாவியேஊரினில் பாய்ந்ததையா
குடியான மக்கள்யாங்கள் குடித்தனக்காரரையா
கூடியேசெய்தி உரைத்தோம் கேளுமையா
பெண்டுபிள்ளை சுற்றத்தாரும் வீதினில் வந்துவிட்டோம்
பொல்லாத மிருகங்களால் நாங்கள்நொந்தோம்
தாங்கள் வாழும் ராஜ்யத்தில் துஷ்டமிருகம் வந்தாலே
தைரியமாய் எப்படிநாங்கள் பிழைப்போம் மேலே
பாதக மிருகங்களை பாங்கிடனே ஓட்டிடுவீர்
பட்சம்வைத்து குடிகளை காத்திடுவீர்

(நம்பி வ-ம்) குடிகளே என்ன தெரிவித்தீர்.

(குடிகள் வ-ம்.) அரசே எந்தகாலமும் நமது ராஜ்யத்தில் இந்த இந்த அநீதி நேர்ந்ததே கிடையாது. இவ்வருடம் காட்டினில் வாழும் துஷ்ட மிருகங்கள் ஊரினில் வந்து பயிர் தான்யங்கள் ஆடுமாடுகளையும் இன்னும் வேண்டியதெல்லாம் அநியாயமாய் அழித்து விட்டது மகாப்பிரபு.

(நம்பி வ-ம்.) ஹா ! ஹா ! என்ன ஆச்சரியம் கானகத்திலிருந்து காலம் கழிக்கப்பட்ட அந்த துஷ்டமிருகங்கள் நமது நகருக்குள் பிரவேசித்த காரணம் என்னவென்று யானறிவேன்; ஆயினும் சரி குடிகளே நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நமக்கு நமது கழுகுமலைநாதன் இருக்குமளவும் ஒன்றும்குறைவில்லை அவர் அவர் இல்லத்திற்குச் செல்லுங்கள். யான் சென்று அச்சண்டாள மிருகங்களை அதோஹதஞ் செய்து சடிய சீக்கிரத்தில் வருகிறேம்.

(குடிகள் வ - ம்.) அப்படியே மகாப்பிரபு:

(குடிகள் அவர் அவர் இல்லத்திற்குப்போய் விடுகிறூர்கள்.)

(நம்பி வ - ம்.) புதல்களே குடிகள் நம்மிடத்தில் முறையிட்டதால் இனி காலதாமஞ் செய்யக்கூடாது புறப்படுவீர்கள் வேட்டைக்கு.

(புதல்வர்கள் வ - ம்.) பிதா தாங்கள் சித்தத்திற்கு மாறுது. அப்படியே புறப்பட சர்வசித்தமாய் காத்துக் கொண்டிருக்கிறோம்.

நம்பிராஜன் அவனது புதல்வர்களும் வேட்டைக்குச் செல்லுன்றனர்.

சீன் 2.] [இடம்—கானகம்]

இங்கிலீஷ் நோட்.

பல்லவி.

வேட்டையாடுவோம் வாரீர் வேட்டையாடுவோம் வெகு
வேகமாய் வனத்தைநாடி வேங்கைபுலி தன்னைத்தேடி (வே)

அநுபல்லவி.

காட்டில்வாழ் மிருகத்தை கத்திக்குதுண்டாக்குவோம்
தாட்டிகமுடனே துஷ்டமிருகத் துயரைப்போக்குவோம் ()

சரணம.

கத்தி பாலா ஈட்டி அம்புகையில்கொண்டு நடிப்பீரே
கானகத்தில் வாழும் சிங்கத்தைசதரி வேட்டையாடுவீரே
பிடிபிடி சிங்கத்தை துண்டுதுண்டாய் வெட்டியே
ஏகுவீர் இகபர சுகத்தைநீங்கள் காட்டியே (வே)

பண்டையைப் பிளந்திடுங்கள்
மடித்து உயிரைப் போக்கிடுங்கள் (வே)

(புத்திரர் வ - ம்.) பிதா! அதோ அதோ பார்த்தீர்களா கூட்டம் கும்பலாய் வரும் மான் கூட்டமதை திம்பிப்பார்த்து ஹ! ஹா இந்த பக்கம் பாருங்கள் மதங்கொண்ட வெள்ளையானைகள் ஒன்றாய்க்கூடி ஓடி வருகின்றன இதோ அச்சண்டாள மதங் கொண்டயானைகளை கொன்று போட்டுவிடுகிறேன்.

(ஒரு வேடன் கொல்ல ஓடுகிறான். உடனே அவனை நம்பிராஜன் பிடித்துக்கொண்டு.)

(நம்பிராஜன் வ - ம்.) ஏ மைந்தா பதராதே சற்று தாமதிப்பாய் எப்போதும் யானைகூட்டமுத்தையும் மான்கூட்டத்தையும் மாத்திரம் கொல்லாதீர் மற்றெந்த துஷ்ட மிருகங்களாயினும் அதன் உயிர்களைப் போக்க சற்றேனும் தயா தாட்சண்யம் பார்க்காமல் கொன்று போட்டுவிடுங்கள், எனக்கு ஆயாசமாயிருப்பதால் இங்ஙனே இம் மரநிழலில் சிறிது நேரம் அமர்ந்து இருக்கிறேன். நீங்கள் அதோ தெரிகின்ற தோட்டத்தில் ஏதேனு மிருகங்கள் உயிர்தப்பி பிழைத்துக்கொள்ள ஓடி பதுங்கிக் கொண்டிருப்பதால் அதைக்கண்டு வேட்டையாடி உமது வாளிற்கும் வில் அம்பிற்கும் இரையாக்கி விட்டுவாருங்கள்.

புத்திரர் வ - ம்) அப்படியே செய்து வாரோம் பிதா.

சீன் 3.] [இடம் ஓர் வனம்]

நம்பிராஜன் வேடர்கள், குழந்தை முதலானோன்.

எமகாதகன்: வ - ம்: அடே சகோதரர்களே வாருங்கடா போகலாம் (சற்று கவனித்து) அடே கொஞ்சம் சும்மா யிருங்கள் கூச்சலிடவேண்டாம் ஏதோ குழந்தை அழுகுறல் கேட்கின்றது. அடே வாருங்கடா நாம் எல்லோரும் போய் பார்க்கலாம்.

(எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து வள்ளிக்கிழங்கு வெட்டிய பள்ளத்தில் ஓர் குழந்தை அழுவதைக்கண்டு,)

(எரி மூக்கு சிங்கன் வ - ம்.) அண்ணா! இது என்ன சூது இக் குழியில் அழுதுக் கொண்டிருக்கின்றது. ஹா! ஹா!! என்ன அழகு என்னகம்பீரம் என்ன சொகுசு: என்ன ஜோதிப் பிரகாசம் அடே எரிமூஞ்சி கருப்பா நீ அதிக விரைவாகச் சென்று நமது பிதாவை அழைத்து வருவாய் சீக்கிரம்.

(எரி மூஞ்சி கருப்பன் வ-ம்.) பிதா நமஸ்கரிக்கின்றேன்.

(நம்பி வ-ம்) கல்யாணி மைந்தா என்ன விசேடம்?

(எரி மூஞ்சி கருப்பன் வ - ம்.) பிதா பள்ளத்தில் குழந்தையைக் கண்டோம் ஆதலால் தாங்களை அழைத்தோம்.

நம்பி வ-ம்: அப்படியானல் வா பார்க்கலாம்.

• எரிமூஞ்சி கருப்பன் குழந்தையைக்காட்ட நம்பிராஜன குழந்தையைக்கண்டு பூரிக்கின்ருன்.

நம்பி வ-ம்: ஏ கருணுகரனின் கனிஷ்ட புதல்வனை கந்தவேளே எங்களின் மாதவப் பெயரால் எங்கள் கர்மத்தைப்போக்கி புத்திபாக்ய பேரின்பத்தை உண்டாக்கும் பொருட்டுதான் காட்டில்வாழ் துஷ்ட மிருகங்களை என் நாட்டினில் பிரவேசிக்கச் செய்தாய்போலும். ஹா! ஹா எங்கள் தவப்பயனே பயன் ஆயினும் மைந்தர்களே என் கண்ணிற்ககப்பட்ட கண்மணி செல்வத்தைப் பக்குவமாய் எடுத்துக்கொண்டு அரண்மனைக்கு ஏகுவோம் வாருங்கள்.

சீன் 4] [இடம் அரண்மனை

நம்பிராஜன் குழந்தையை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் செல்கிருன்.

நடர் நங்கைமோகினி, தாதி, நம்பிராஜன், வேடன் முதலானோர், இராகம் பியாக் அடதாள சாப்பு.

பல்லவி.

பாலாபிஷேகப் பழனி மலையப்பன்
பாதப் பிரசாதம் பரமானந்தம்

அநுபல்லவி.

சாலோக சாமீப சாரூபசாயுச்யம்
தந்திடக் கந்தனொருவன் சொந்தம்

தொகையரு.

வேலா சுசீலா நற்கோலா கலாவா
நாலா கலா ஞான நூலி பவா

முடுகு.

விகசிதநட மிடு மயிலுரை வாசன்
இகபர மிரண்டிலும் சுகந்தரு நேசன்
ஈசன் முருகேசன்
பேசும் பிரகாசன்
எங்கும் நிறைந்த குணங்குடியான் (பால)

நம்பி வ - ம்: பிரிய சகி எங்கே காணேன் எனது காதல் பிரிய நங்கைமோகினியைக் காணேனே சீக்கிரஞ்சென்று அழைத்துவா.

நங்கைமோகினி வருகிருள்.

ஆலவாய் மதுராபுரி என்றவர்ண மெட்டு.

செந்தூர் மாநகர் தன்னில் வாழ்ந்திடும் சாரதாஎனை ஆதரீ
சாரதா எனை ஆதரீ அருள்புரிந்து பராபரி

தொகையரு.

சீலமாய் அறுபத்துநான்கு திருவிளையாடல்
செய்திட்ட சிவத்தின் பாரி
திருஞான சம்பந்தனுக்கு நானுகவேவந்து
முலை கொடுத்த தயாள குணத்தின் வீரி
தாயகத்தில் சர்வ மக்களையும் காத்து ரக்ஷிக்கும் கம்பீரி

பாட்டு.

காலை மாலை சதானீயே காத்து ரக்ஷிப்பாய் தேவியே
காத்து ரக்ஷப்பாய் தேவியே பாலன் வெங்கடேசனை தாவியே

நங்கை வ - ம்: பிராணேசா என்னே இதுகால பரியந்தம் தாங்களது திருமுகம் செந்தாமரை மலர்போலிருக்கின்ற முகமானது இத்தனை நாளின்றி இன்று இவ்வளவு குதூகுலத்துடன் பிரிய சகியை ஏன் அழைத்துக் கொண்டு வந்தீரே என்ன காரணம்.

நம்பி வ - ம்: கண்மணி நம் குலதெய்வமாகிய கந்தனின் காடட்சமே கடாட்சம்.

நங்கை வ - ம்: என்ன அத்தகையான கடாட்சம்.

நம்பி வ - ம்: கண்மணி என்னே என்ன கடாட்சமென்று தெரிவித்தாயே (குழந்தையைக்காட்டி) இதோ பார் நம் துற்பாக்ய மொழிந்து கந்தனருளால் நமக்குகாருண்ய கடாட்சம் சேர்ந்தது யாங்கள் வேட்டை மார்க்கமாய்ச் செல்கையில் வள்ளிக்கிழங்கு தோட்டத்தில் வடிவழகிய ரத்தினத்தை அம்முருகன் நமக்களித்தார்.

நங்கை வ - ம்: ஹா! ஹா! என்ன பிராணேசா அதென்ன குழந்தையா அதை என் கரத்தில் தாருங்கள்

நங்கைமோகினி குழந்தையைக் கரத்தில் வாங்கிக்கொண்டு

நங்கை வ-ம்: அடி என் கண்ணே எங்கள் கலிதீர்க்கும் செங் கருப்பே கோவக்கனியே கோதில்லா மாணிக்கமே.

விருத்தம்.

புத்திரி ஒன்றில்லாமல் புவிமீது பரதவித்தோம்
சித்தத்தின் துயர்போக்க செந்தூர் கந்தனருளால்
ரத்தினம் போலுதித்தாய் மாதவப்பெயர் தனக்கு
மெத்தவே பூரிப்பாக மேன்மையாய் வளர்ப்போமம்மா.

நங்கைமோகினி தரு

காக்ஷி கண் காக்ஷியே என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

கண்ணே கண்மணியே கற்கண்டே செங்கனியே

அநுபல்லவி.

கார்த்திகேயனருளினால் கீர்த்தியாய் ஜெனித்த எந்தன் கண்

சரணம்.

பெண்ணில்லை என்று நாங்கள் பெருந்தவம் புரிந்திட
பொறுப்பாய் வள்ளிக் கிழங்கு தோட்டந்தன்னில் ஜனித்திட
சஞ்சல இன்றேதம்மா சரிவர துலேந்திட
சரஸ்வதியே உன்னைக்கண்டு சந்தோஷம் யாங்கள்கொண்டிட
கண்டுனை எடுத்தபோதே களிக்குதம்மா என் உள்ளம்
கண்மணியே எந்தன்மனம் கவலைதீர்ப்பாய் குணசெல்வம்
அண்டமெல்லாம் புகழ்ந்திட வளர்ப்பேனே அருஞ்செல்வம்
அழகு வடிவுடைய ஆரணங்கே என் செல்வம் கண்

நங்கை வ-ம்: நாதா நமது மாதவப் பயனே பயன் நமது கருணைக்குகந்து நாம் துதிக்கக்கூடிய குலதெய்வமாகிய கழுகுமலை கந்தனின் கடாட்சத்தால் நமக்குக் கிடைத்த ஸ்ரீகார ரத்தினத்திற்கு ஓர் அழகிய நாமதேயஞ் சூட்ட வேண்டுமல்லவா ஆதலால் தாங்கள் சற்றுயோசித்து அழகு வதனகுணமுடைய என் செல்வத்திற்குப் பொருத்தமான நாமதேயம் வையுங்கள் பிராணேசா.

நம்பி வ-ம்: என் ஆருயிர்க்காதலியான என் கண்ணே கந்தனருளால் இக்குழந்தை கிடைத்த இடமோ வள்ளிக்கிழங்கு கட்ட

தோட்டத்தில் கிழங்கு வெட்டிய பள்ளத்தில் கண்டெடுத்த தால் யான் இக்குழந்தைக்கு தக்க நாமம் "வள்ளி" என நாம மிட்டேன் உன் சித்தமும் மைந்தர்களின் சித்தமும் எவ்வா றென்று யானறியேனடி என் பிராண காதலி !

எமக்காதகன் வ - ம்: ஆம் பிதா இவ்விதமே அழைத்தால் நலம்.

நம்பி வ - ம்: ஆயினும் என் கண்மணியான குழந்தையைப் அதி ஜாக்கிரதையாக பாதுகாத்து வாருங்கள் யான் தர்பாசனத்திற் குச் சென்று வருகிறேன்.

(எல்லோரும் போகின்றார்கள்.)

சீன் 5] [இடம் தர்பார்

நடர். நம்பிராஜன், நம்பிராஜனது புதல்வர்கள், வள்ளி முதலானோர் நம்பிராஜன் புதல்வர்களுடன் சபையில் அமர்ந்திருக்கின்றான்.

நம்பி வ - ம்: புதல்வர்களே யான் இதுகாலமாக ஒருமகப்பேறின்றி மனம் வருந்தி இருந்தேன் அதற்குக் கருணாகரனின் கனிஷ்ட புதல்வனாகிய கழுகாசலக் கந்தனின் கருணைபொங்கி அழகி லினை தனக்கொருவரும் நிகரில்லாத அருஞ்செல்வியை அடை ந்தேன் ஆதலின் என் கண்மணியான குழந்தை யௌவன பருவமடைந்ததால் அவளுக்குத் தக்க மணாளனைத்தேடி என் கண்ணாரக்கண்டு களிக்க வாய்க்கவில்லை

எலிமூஞ்கி சிங்கன் வ - ம்: பிதா! தாங்கள் வருந்துவதில் யாது பயன் அப்பரபிர்மன் அம்மாதை எப்போது படைத்தானோ அப்போதே அவளுக்கேற்ற முந்தியே ஒருமணாளனை ஜனிக் கச் செய்திருப்பான் ஆயினும் அவளுக்குத் திருமணர்த்தம் நெருங்கி விட்டால் நாம் யோசியாமலே தானாகவே முடிந்து விடும். அவளென்ன தாங்களை மணம்புரிந்து வைக்கும்படி வற்புறுத்துகின்றனளா என்ன அதுவொன்றுமில்லை. ஆத லால் நமது குலதர்மத்தை அநுஷ்டித்து அன்னவளை நமது தினைப்புனத்திற்கு அனுப்பி தினைபுனையை பறவை பட்சிகள் அழிக்காமல் பாதுகாக்கும்படி கட்டளை யிடுங்கள் பிறகுபார்த் துக் கொள்ளலாம்.

நம்பி வ-ம்: புத்திரா இதுவும் நீ புகல்வது நன்மார்க்கமே ஆயி னும், இளங்கொடியை இப்போதே இங்ஙனம் அழைப்பாய் சீக்கிரம்.

எலிமுஞ்சி சிங்கன் வ-ம். அடே தம்பி நமது சகோதரியான வள்ளிநாயகியை அழைத்து வருவாய் சீக்கிரம் சென்று.

(வேடன் போகிருன், வள்ளி வருகிருள்.)

இராகம் சாரமதி தாளம் ஆதி.

அநுபல்லவி.

ஸாக்ஷாத்காரணீ ஸத்பக்தி
ஞானசங்கீத விஹீனுலகு மோ

பல்லவி.

மோக்ஷமுகலதா புவிலோ ஜீவன்
முக்துலகீ கானி வாரலகு மோ

சரணம்.

பிராணனலசம் யோகமுவல்ல
பிரணவ ஸப்தஸ்வரூப
வீணவதண லோலுடௌ சிவமனே
விதமெருகரு தியாகராஜவினுத மோ

வள்ளி வ-ம்: பிதா நமஸ்கரிக்கின்றேன்.

நம்பி வ—ம். குழந்தாய் மங்கலமுண்டாக எழுந்திரு.

வள்ளி வ-ம்: பிதா இவ்வடியாளே ஓர் பொருட்டாய் மகாஜனம் பொருந்திய இச்சபையில் அழைத்ததன் காரண மென்ன.

நம்பி வ-ம்: காரணமொன்றில்லை ஆயினும் தெரிவிக்கிறேன் கேள்.

நம்பிராஜன் தரு.

கலிலோ என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

கண்மணியினி தினைப்புனம் நீசென்று
காவல்நீ புரிந்திடுவாய் தெரிந்திடுவாய் கண்

அநுபல்லவி.

கண்ணே என் கலிதீர்க்கவந்திட்ட காரிகை மாமணியே கண்

சரணம்.

அன்னகுயில் கொண்டைபுருக்களை அறிவாய் ஓட்டிடுவாய்வெகு
தென்பாய் தினைபுனமே நீ சென்று தீரமுடன் வாட்டிடுவாய்
அன்பாய்க்கவன் கல்லினாலதை
அடித்துத்துரத்திடுவாய் அறிந்திடுவாய் கண்

நம்பி வ-ம்: கண்மணி குழந்தாய் தெரிபவந்ததா நீ அதிக விரைவாக அடுத்த கானகஞ்சென்று நமது தினைப்புனத்தில் துஷ்ட பக்ஷிகள் நாடாமல் அதிக ஜாக்கிரதையாக தினைப் புனத்தில் காவற் புரிவாய்,

வள்ளி வ-ம்: பிதா! தாங்கள் மனோபிராயம் போலவே யான் சென்று காவற்புரிய கடமைப் பட்டிருக்கின்றேன். ஆயினும் எனக்கருகில் துணையுடனிருக்க யாரேனும் ஒரு சேடியை அனுப்புங்கள்.

நம்பி வ-ம்: அவ்விதமே உன் மனதிற்குப் பொருத்தமான சேடிகளில் யாரையேனும் ஒருவளை அழைத்துச் செல்வாய் அம்மணி.

வள்ளி வ-ம். அப்படியே சென்று வருகிறேன்.

வள்ளி செல்கிறாள்.

சீன் 6] [இடம் தினைப்புனம்

நடர் வள்ளி, சகி, நாரதர் முதலானோர்.

(வள்ளி காவல் புரிகின்றாள்)

மிஸ் T. R. இராஜலக்ஷிமி பாடிவருவது.

கனகசபாபதி தரிசனம் ஒரு நாள் என்ற மெட்டு.

பல்லவி.

பாங்கியரே பொல்லா பறவைகள் கும்பலாய்
பாய்ந்து வருகுதோடி பா

அநுபல்லவி.

ஓங்கியே அடித்திடுவேன் ஒருநொடி தன்னிலிதோ
சோங்கிவிழுகும்படி சூரத்தைகாட்டிடுவேன் பா

சரணம.

பரிவாய் தந்தைவிதைத்தை பயிரெல்லாமழிக்க
பாவையரே இதனை கண்டோம் முழிக்க
அரிவை யிப்பக்ஷிகளின் அகந்தனை ஒழிக்க
ஆனந்தமுட்னேநம் அரண்மனைசெழிக்க பா

காட்டுபுராக்கள் காடைகௌதாரிபாராய்
காவல் இருப்பவரை காணுமல் நேராய்
கூட்டங் கூட்டமாக குதிக்குது சீராய்
குத்திவதைக்குரேன்பார் இனிதாருமாராய் பா

கவண் கல்லினுலதை யோட்டிடலாமே
கண்டவுடனவைகள் கடுகியே போமே
புவனமதிலே நல்ல புகழ்வரு வோவே
புண்ணிய ரென்தந்தை சொல்படி நாமே பா

வள்ளி வ-ம்: அடி! இப்பக்ஷிகளின் அலங்காரத்தைப் பார்த்தனையா சரி இன்னும் பார்க்கலாம் (வள்ளி ஆயலோட்டுகிருள்.)

மிஸ் T. R. இராஜலக்ஷிமி பாடிவருவது.

இராகம் எதுகுலகாம்போதி தாளம் ரூபகம்.

ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
சோ சோ சோ

நாலாவித கிள்ளைகளா காயனபாஷை பக்ஷிகளா
மேலான அன்னங்களா மாடப்புரா கிள்ளைகளா
சோ சோ சோ

புல் புல் குருவிகளா புள்ளிமான் குட்டிகளா
வெள்ளையணிப் பிள்ளைகளா வனத்தில்வாழும் விளங்குகளா
சோ சோ சோ

தவுட்டுபுரா பைசிகளா தவித்துவந்த கிள்ளைகளா
கவுண்டினு லடிபடவே கடுகியிங்கு வந்தீர்களா
சோ சோ சோ

மிஸ் P. T. நாகபூஷணம் பாடிவருவது.

(இதற்குள் நாரதர் வருகிறார்)

நாரதர் தரு.

நாதவிந்துகலாதி நமோ நம
வேதமந்த்ர சொருபா நமோ நம
ஞான பண்டித சாமீ நமோ நம வெகுகோடி

நாமசம்புகு மாரா நமோ நம
போக சுந்தரி பாலா நமோ நம
நாக பந்தமயூரா நமோ நம பரசூரர்

சேததண்ட விநோதா நமோ நம
கீதகிண்கிணி பாதா நமோ நம
தீரசம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜ

தீபமங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவகுஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்

ஈதலும் பல கோலால பூசையும்
ஓதலுங் குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையும் மறவாத

ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழமண்டல மீதே மனோகர
ராஜகெம்பீர நாடாளு நாயக வயலூரா

ஆரதம் பயிலாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முனாளினில்
ஆடல் வெம்பரிமீ தேறிமா கயிலையிலேகி

ஆதியந்த வுலாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடினில்
ஆவினன் குடிவாழ்வான தேவர்கள் பெருமாளே

நாரதர் வ-ம்: ஆஹா! இம்மாது யாராயிருக்கலாம் இவள் என்ன அழகு என்ன ஒய்யாரம் என்ன கெம்பீரம் ஆஹா இவளென்ன தேவலோகத்துப் பூர்ணசந்திர உதயபிம்பமோ அல்லதுதேவேந்திரனை வெட்கச்செய்பவந்த தேவர்களுக்கு அரசியோ இவ

ளது ரூபலாவண்யத்தைப் பார்க்கும்போதே எனது இருகண்களானது மக் ஒளி குன்றிப்போகின்றதே ஆஹா இத்தகைய ரூபலாவண்ய மாதரசியை எனது தந்தை எவ்வாறு படைத்தனரோ தெரியவில்லையே? ஒருவேளை அவரது படைப்புத் தொழில் முறையில் முதன்மை வாய்ந்ததோ தெரியவில்லை. இவளை யீன்ற தந்தை தாயார் யாரோ அறியேன். (ஞான திருஷ்டியாலுணர்ந்து) ஆஹா! நமது பிதாவிற்கு என்னமதி இன்னவளுக்கு இவ்வளவு அழகைப் படைத்தவர் மான்வயிற்றிலேன் ஜனிக்கச் செய்தார் (சற்றுயோசித்து) ஆஹா யானறிந்தேன், அறிந்தேன் இவளின் பூர்வீக விருத்தாந்தங்களை யறிந்தேன் முன்னொருகால் சாக்ஷாத் குமரக்கடவுள் யுத்தம் புரியும் பொருட்டுச் செல்லுங்கால் இவள் அன்னவரை மணம் புரிந்து கொள்ளும்படி வழிமறித்தி வற்புருத்திய இருபெண்களில் இவளொருத்தியாகும். அச்சபதத்தை முடிப்பதின் பொருட்டு எனது பிதாவும் இவ்விதமாக படைப்பித்தனர் போலும் ஆயினும் இக்கன்னிமையை நாம் எவ்விதத்திலேனும் அத்திருக்கைவேல் முருகனுக்கு விவாஹம் செய்து வைக்க வேண்டியதே ஆனாலும் இம்மாதினது உட்கருத்தை அறிய வேண்டுமல்லவா? அருகில் நண்ணி உணரலாம்.

நாரதர் அருகில் வர வள்ளி பணிகின்றாள்.

வள்ளி வ-ம்: சுவாமி நமஸ்கரிக்கின்றேன் அனுக்கிரஹிப்பீராக.
நாரதர் வ-ம்: அம்மணி மங்களமுண்டாகுக தயிரவும்.

மிஸ் T. R. ராஜலக்ஷ்மி மிஸ் P. T. நாகபூஷணம்

இருவருக்கும் தர்க்கம்.

இராகம் பிலஹரு தாளம் ஏகம்.

நார. எக்குலத்தில் ஜெனித்த ஏழ்ந்திழையேயுரைப்பாய் அம்மா
வள். பக்குவமாக குறக்குலம் தன்னிலே பிறந்தேன் முனியே
நார. உந்தனை யீன்றதொரு உத்தமர் பெயரென்ன அம்மா
வள். எந்தனையீன்றார் நம்பிஎன்றல் அன்னை மோகினி முனியே
நார. ஊரில் உனையழைக்கும் பெயரது என்ன சொல்வாய் அம்மா
வள். பாரில் எனையே வள்ளி பாவையென அழைப்பார் முனியே
நார. கேளுமித் தொழில்செய்தல் கேவலமல்லவோ காண் அம்மா
வள். காணும் எங்களின் குலநற்றொழில் இது தானே முனியே
நாரதர் வ-ம் என் அம்மணி உனது பூர்வீக விர்த்தாந்தங்களை தெரிவித்த பின்னர் என் மனது ஒருவாறாக உறுத்தப்படு

கின்றது என்ன செய்யலாம் அவரவர் செய்த ஜென்மராசிக்கு யார் என்ன செய்யலாம்,

வள்ளி வ-ம்: என்ன விசேஷம் சுவாமி

நாரதர் வ-ம். விசேஷமில்லை அதாவது இவ்வளவு ரூபாலாவண்யம் பொருந்திய உருவத்தை உற்பத்திசெய்த அப்பிரமன் உன்னை ஒரு மகா பெரும அரசனிடம் பிறக்குவிக்கக்கூடாதா என் பதுதான் என்நெஞ்சை உருக்குகின்றது.

வள்ளி வ-ம்: மகாப்பிரபு எதற்காக அரசர்கள் மனையில் பிறக்க வேண்டும்.

நாரதர்-வ-ம்: ஏனென்றால் செங்கோல்புரியும் செல்வக்கோமான் வீட்டில் பிறந்தால் இத்தகையான தொழில் செய்யமாட்டாய் செல்வாக்குட னிருந்து செழிப்பாய் வளர்ந்து வருவாய்.

வள்ளி வ-ம்: ஏன் சுவாமி யான் என் குலத்தினது ஆசாரத்தை தானே செய்து வருகின்றேன்.

நாரதர் வ-ம்: ஆம் அதுவும் உண்மைதான் ஆயினும் உன் ஆசாரத்தொழிலை செய்தாலும் பூர்ணபருவமடைந்து இத்தகையான தொழிலைச் செய்வது தகாது வென்று யான் கூறுவேன் இவ் விஷயத்தில் உனையீன்ற தந்தை கவனிக்க வில்லை போலும் தெரிகின்றது.

வள்ளி வ-ம்: சுவாமி தாங்கள் வந்தகாரியத்தைக் கவனித்துச்செல் லாமல் ஏதேதோ உரைக்கின்றீரே இதெல்லாம் தாங்களைப் போன்றவருக்கு உசிதமல்ல ஆதலால் தாங்கள் வந்தகாரியத் தைக் கவனித்துச் செல்லுங்கள்.

நாரதர் வ-ம்: அம்மணிசரிதான் யான்போய் வரட்டுமா? ஆயினும் இன்னும் ஒரு சந்தேகம் அதாவது உனக்கு மணமாகவில்லை போல்தெரிகிறது.

வள்ளி வ-ம்: சுவாமி மணம் ஆனாலென்ன ஆகா விட்டாலென்ன.

நாரதர் வ-ம்: அம்மணி அதற்கல்ல.

மிஸ் T. R. இராஜலக்ஷ்மி மிஸ் P. T. நாகபூஷணம்

இராகம் பிலஹரி தாளம் ரூபகம்.

நார. பருவகாலத்தைவீணில் பழாக்கலாகுமோ அம்மா

வள். மருவியவிதியதை மாற்றஎந்தனாலாமோ முனியே

நார. விதிவிதியென்பது வீணான செய்கையல்லோ அம்மா

வள். விதியில்லையென்றுரைத்தால் விண்ணுல் என்ன உண்டுகாண் [முனியே

நார. மணர்ந்து சுசியாமமேல் பொழுதைகழிக்கலாமோ அம்மா
வள். எனையீன்றதாய் தந்தை எண்ணம் வைத்தால் முடியும் முனியே
நார. காவிருந்து உலகில் ஏனோநடக்கொணாதோ அம்மா
வள். காலத்திற்சேற்ற கோலம்கருதுவீர்துசெய்தி முனியே
நார. பாலுண்டு பசியார காலம்வோண்டும்மா வேறு அம்மா
வள். பாலோடாயினும் காலம்பார்த்து அருந்தவேணும் முனியே
நார. கடவுள் சுதனும்கந்தன் காக்ஷியரிந்ததுண்டோ அம்மா
வள். காக்ஷி யெவ்விதமானல் கருதுவதிலென்ன பயன் முனியே
நார. விண்ணோர் குறைதீர்த்த வேல் முருகனல்லவோ அம்மா
வள். என்னிடம் தனிலதை இபம்பிடிலென்ன சுகம் முனியே

நாரதர் வ-ம்: அம்மணி உனது தந்தைதாயாரின் வார்த்தையைப் போலிருப்பாயாகில் அவர்கள் உனது அழகுக்குரிய ஒரு குமவனைத்தான் விவாகம் செய்யப்போகிறார்கள். யான் தெரிவிப்பதுயாதென்றால் அந்தகழுகுமலையில் அமர்ந்திருக்கும் அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகன், தேவர்களைச் சிறைமீட்டினவன் தெய்வானையின் சமேதராய் ஓராறுமுகமும் ஈராறுகரமும் அழகிய பொற்பீட கிரீடமும் அணிந்து முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளும் அடிபணிய அதிக விச்சித்திரமான புள்ளி மயில்மீது சேவற்கொடியுடனமர்ந்திருக்கும் அக்கழுகாசல கந்தனை மணர்ந்தால். உனக்கநேக நன்மையுண்டாக்கும், உன்னையீன்றதாய் தந்தையவர்களுக்கும் மேன்மையான கீர்த்தியையும் இகபரசுகமும் கிடைக்குமென்பதுதான் என் சித்தத்தின் எண்ணமே தவிர வேறொன்றில்லை தாயே.

வள்ளி வ-ம்: சுவாமி! தாங்களுக்கு என்மீது அவ்வளவு கிருபை சுரந்திருக்க வேண்டாம். தாங்கள் தெரிவித்த கேவலம் மாயாண்டியினது புதல்வனை கழுகாசலனையே விவரிக்கமுடியாது தாங்கள்தெரிவித்த மொழியை கேட்கவுமுடியாது ஆதலால் சென்று வாருங்கள் முனிவரே.

நாரதர் வ-ம்: அம்மணி என் ஐயனை கேவலம் பண்டாரத்தின் புதல்வனென்று நீயுரைத்தாய் என் ஐயன் கேவலம் பண்டாரத்தின் புதல்வனென்பது உண்மைதான் என்னையும் போகும்படி உத்தரவளித்துவிட்டாய் யான் போகுவதற்காகத்தானா இவ்வளவு சிரத்தையுடன் இங்குவந்து இவ்வளவு சிரத்தையுடன் உனக்குரைத்தது. ஆஹா! அன்னவரின் பெருமையையும்

புகழ்ச்சியையும் ஈரேழுபதினான்குலகங்களும் அறிந்திருந்தும் நீ அறியவில்லைபோலும் தெரிகின்றது. ஆயினும் என் ஐயன் பெருமை என்னவென்று சொல்வேன் அந்த ஆயிரநாவை யுடைய ஆதிசேடனால் உரைக்கமுடியா தென்றால் கேவலம் ஒருநாவையுடைய இப்பஞ்சையால் என்ன உரைக்கமுடியப் போகின்றது. என்றால் உரைக்கமுடியும்வரையில் உரைக்கின் றேன். சற்றுகவனமாய்க்கேட்பாய்.

இராகம் இந்துஸ்தான்தோடி தாளம் ஆதி.

பல்லவி.

முருகன் திருமால் மருகன் பெருமை — அந்த
முக்கண்ணனுக்கு மிலைத்தணிகாசல முருகன்

அநுபல்லவி.

இருகாதமும் மாதவனை கண்டால்
இலகும்படிகளிர் பொங்கிடவளரும் திருகழுகாசல முரு

சரணம்.

புன்னகை மேவும் வதனவம்பத்தின்
பொருந்து மந்தகாசன் செழும்
பொன்னொளிர் மேனியும் பன்னிருகரங்களும்
பொருந்துங்க்ருபாகவேசன்
சந்நிதியே வந்து சந்ததமும் வாசன்
தவஞ்செய்யும் தொண்டர்க்கருளு முருகேசன்
வுன்னைக்கண்டால் விலகாதவர் தன்னேசம்
உலகத்தினிலவருக்கிணை
எவருற்றவர்— தணிகாசல முருகன்

வள்ளி வ-ம்: சுவாமி எல்லா விஷயமும் கூர்ந்தாய்விட்டதல்ல வா தயைகூர்ந்து சென்று வாருங்கள்.

நாரதர் வ-ம்: அம்மணி யான் என்னமோ பாவம் உனது அழகை மெச்சிக்கொண்டு உன்னைமேலான ஸ்திதியில் சேர்க்கலாமென்று எண்ணியிருந்தேன் நீ ஏதேதோ மறுத்துப்பேசுகிறாய். யான் என்செய்வது. இதெல்லாம் உன்பிழையன்று உன்தாய் தகப் பன் செய்த பூஜாபலமே ஆயினும் யான்சென்று வரட்டுமோ.

வள்ளி வ-ம்: சுவாமி அதற்கும் தடையுண்டோ என்னைக்கேட்க வேண்டுமா ஒருவித ஆக்ஷேபனையின்றி சென்று வாருங்கள்.

நாரதர் வ-ம்: அம்மணி நீயே அந்த கழுகாசலக் கந்தனை மணர முடியாதென்று தெரிவித்து விட்டாய் ஆயினும் யான் அந்த

பிர்மனுக்கும் புதல்வனுகில் அன்னவருக்கே உன்னை எவ்வித மேனும் மணம் புரிவிக்கின்றேன் பார்.

வள்ளி வ - ம்: சுவாமி தாங்களால் முடியுமாகில் ஒருகை பாருங்கள் என் அண்ணன்மார் வரும் நேரமாயிற்று ஆகலால் தாங்கள் இங்குநின்றிருந்தால் தாஙகளது பிராணனுக்கு ஆபத்து நேரிடும் தயைபுரிந்து சென்று வாருங்கள் சுவாமி.

நாரதர் வ - ம்: அம்மா! யான் தாங்களுக்காக பரிந்து ஒன்று உரைக்கின்றேன் அதை தயவுசெய்து கேட்பாய் அம்மணி யாதனில் அநேகபெண்களையும் பெண்களுக்கு ஏற்ற மணளனையும் யான் கண்டு இருக்கின்றேன் தாங்களுக்கு ஏற்ற கந்தன் தாங்கள் மீது அதிக பக்ஷம் கூர்ந்திருப்பார் என்று தான் யான்.

இராகம் சுருட்டி தாளம் ரூபகம்.

பல்லவி.

சொல்லும் வார்த்தையைக் கேளம்மா
தள்ளா தேயம்மா
சொல்லும் வார்த்தையைக் கேளம்மா

அநுபல்லவி.

அல்லும் பகலும் இந்த
அவஸ்தையை நீ விடுத்து
அவனியில் தொழிலற்று
இருப்பாய் நீ செவிகொடுத்து சொ

சரணம்.

உனக்காகவே நான்சொன்னேன்
ஓஹோ இந்த க்ஷணமே
மனக்கவலை கொள்ளாதே
மானிலத்தி யல்புதான் சொ
வேறொரு வருக்காக
வேண்டிலேன் இல்லையம்மா
ஆறுமுகனே சொந்த உன்
ஆசை மணளனம்மா சொ

நாரதர் வ - ம்: அம்மா! கருணுகரனின் மைந்தனுகிய கந்தவேலன் தாங்கள் மீது அதிக ஆசை கூர்ந்து சரஸசல்லாபமாக வாழ்ந்திருப்பாய் அம்மா.

வள்ளி வ - ம்: ஸ்வாமி, இனி அவ்வாறுவார்த்தை புகலவேண்டாம் தயவு கூர்ந்து சென்று வாருங்கள்.

நாரதர் வ - ம்: நல்லதம்மணி அப்படியே சென்று வருகின்றேன்.

(நாரதர் போகிறார்.)

சீன் 7.] [இடம் கழுகாசலம்

நடர் கழுகுமலைக் கந்தன், நாரதர்

மரகதமயிலின்மீது கழுகுமலைக் கந்தன்

அமர்ந்திருக்கும் சமயம்

சக்கர்தர்த்தி T. R. வெங்கடேசன் பாடிவருவது.

பல்லவி.

ஜெய ஜயமீகா குல பால
ஜயஸகளா கமமூல ஜய

அநுபல்லவி.

ஜயயாமராம் கோபால
தீனம் பா லயபாலா ஜய

சரணம்.

தேவமையா சரிதமிதம்
தீனதயா அபாராதம்
ஸ்ரீவஸிதா தவக்ருபயா
கேவால மஹதாணுகி ஜய

ஈக்ஷிதாபக தேஹே
ஈசஜகம் திகிரீஹே
வீக்ஷாசிஹைத மோஹே
வேதாந்தக மகஹே ஜய

ஜெகதண்ட கோடிதனே
ஜஞ்துாந்தர வஸீதனே
அகணுதசும் ஜாதமனே
அபரிமிதாஸ் ருதமேதனே ஜய

நாரதர் வருகிற தரு.

பல்லவி.

மயில்வாகனமேறி வாமுருகா மயி
மாசிலாத தேசுலாவும் மயி
மகத்துவமிலகு ஜெகத்தில் நடமிடு மயி
வாதுசூது ஏதென்மீது நீதிபோத நாயகனே மயி
வந்தின் பந்தம் எந்தனையாண்டிட மயி

அநுபல்லவி.

குயில்மொழி உமையாள் குமாரசண்முகனே
கொஞ்சம் தயவுசெய்வாய் தஞ்சம் தஞ்சம் நானுந்தன் மயி

சரணம்.

அருணகிரிபரவும் ஆபத் சகாயனே
அடியேனெனக்கோர் வரம் அருள்கார்த்திகனே
சரவண பவசிவ சமரபுரீசனே
சங்கரலிங்கன் பங்கல் தங்கும் முருகேசனே மயி

நாரதர் வ-ம்: பக்தர் முக்தர்களுக்கெல்லாம் பரம்பொருளாய் விள ங்குகின்ற ஏகபர மூர்த்தியின் இளைய புதல்வனே உனது திரு மலரடியைப் பணிகின்றேன்.

சுப்பிரமணியர் வ-ம்: ஏ! நாரதமுனியே ஏது இவ்வளவு சிரமத் தோடு வரக்காரணம் யாது.

நாரதர் வ-ம்: ஐயனே அக்காரணத்தை யான் என்னென்றுரைப்பது

நாரதர் வெண்பா.

மாங்கனிக்கும் மிதன்கதலி வண்கனிக்கும் மேலினிக்கும்
பூங்கனியை கண்டு மனம்பூரித்து—யாங்கனிந்தேன்
ஐயா முருகையா அக்கனியை இக்கணமே
கொய்யாது கொல்தனைத்துக் கொள்.

சுப்ர வ-ம்: என்ன நாரதா கனியா! அந்த விடேசத்தைதானு அவ் வளவு புகழுடன் உரைக்கின்றீர்.

நாரதர் வ-ம்: ஐயனே கனியென்றால் சாமான்யமான கனியா அது ஆஹா! நினைத்தாலும் நெஞ்சம் கொள்ளைகொண்டு போகின் றது

சக்கரவர்த்தி T. K. வெங்கடேசன்

மிஸ் P. T. நாகபூஷணம் இருவருக்கும் தர்க்கம்.

இராகம் அடாணு தாளம் ரூபகம்.

சுப். மார்க்கத்தில் கண்ட கனிதனக்குள்ள
சிலாக்கிய மென்ன முனியே

நார. அதை பார்க்கும்போதே மனதார்த்திடும்காண் வெகு
சுவை தரும் பூங்கனியே

சுப். பக்ஷிகள் கண்டால் பதமுடனின்நோம்
பக்ஷணிக்காதோ சொல்வீர்

நார. எப்பக்ஷிகள் கண்டாலும் பறந்தோடும் கந்தனே
பக்ஷமுடன் செல்வீர்

சுப்: எட்டாத கொம்பி லிருந்திடிலக்மனி
எப்படிகொய்திடலாம்

நார. ஐபா எட்டும்படி இரு கொம்புண்டதைப்பிடித்
தேரியே கொய்திடலாம்

சுப். குணமிகு மக்கனி கண்டதின் முக்கிய
குறிகளே தேனு முண்டோ

நார. நல்ல குளிர்ந்தமுகத்துடன் கொங்கையிரண்டுண்டு
குணமிகும் கண்களுண்டு

சுப். பெண்களுக்குள்ள குறியை யுரைப்பதால்
பேசுமோ வாய் திறந்து

நார. ராகப்பண்களுக் கெல்லாம் மேன்மையாம் ருசிதரும்
மைங்கொளியாள் மொழிந்தால்

சுப். தனிமுகும் சொலே தனில் வளரும் கனி
திணைபுனத்தி லேது

நார அதை காயன்று ரைத்தாலும் கன்னிகையென்றாலும்
காரணம் வே ரேது

சுப் வ-ம்: ஏ! பிரம்மாவின் புத்திரரான நாரதமகா முனியே தாங்கள் கூறுவது மிகவும் அதிசயமாகவேதா னிருக்கிறதே. முதன் முதல் வந்தவுடன் கன்னியென்று உரைத்தீர் பிறகு கண்ணிகையன சொல்லி முடித்திவிட்டீரே அப்படி அக்கண்ணிகையின் அருகில் அவளைசேர்ந்த சுற்றத்தார் யாரும் இல்லையா.

(நார - வ-ம்) ஸ்வாமி அக்கன்னிகைக்கு அருகில் சேடி ஒருத்தி இருக்கிறாள் அவள் தவிர ஒருவரும் இல்லை.

(சுப் - வம்) ஏ! முனியே ஓர் அத்வானகானகத்தில் அவள் தனிமையாக நின்று தொழில் முறையில் இருக்கும் அக்கன்னியிடம் சென்று வார்த்தையாடினால் அவள் வயப்படுவாளா என்ன?

(நார - வம்.) ஏ! கர்த்தனே சாதாரணமாக தாங்கள்சுயரூபத்துடன் அக்கன்னியிடம் சென்றால் வேறு மறுமொழி ஒன்றும் கூறாமலே தாங்களையே மணந்துகொள்வாள் அதனால் தாங்களுக்கு புகழும் கீர்த்தியும் கிடையாது ஆதலால்,

நாரதர் தரு.

சுருளிமலை மீதில்மேவும் சீலா என்ற வர்ணமெட்டு
வேடுவனைப் போலவடிவேலா
வேகமுடன்சே நடப்பீர் சீலா

வேகமாக வில்பிடித்து வேடுவனைப்போல்நடித்து
செல்வீர்வெடம் கொள்வீர்

காடுமேலைகள்வாணம்தாண்டி கந்தா
கடுகவே கன்னியரை தேடி அங்கு

கண்ணே நேரே. (வேடு)

நங்கைகண்ணி வள்ளியானை கண்டு
நலமாய்திருமணத்தை விண்டு
நங்கையும் நாதனையும் நானிலம் புகழ்ந்து கண்டு
நாநே புகழ்வேனே

சந்தச்சரப சுகுமாரன் குரு
ச. சு. சங்கரலிங்கத்துக்கு சீடன்
மானிலம் புகழும்பாலன் மாங்கத வெங்கடேசன்
தானே முருகோனே.

நார - வம். சுவாமிதாமதம் செய்யாமல் சீக்கிரம் சென்றுவாருங்கள்

சுப் - வம். நாரதரே காணகம் என்றால் எத்தகையான காணகத்தில் அண்ணவனை தேடுவது.

நார வ - ம். சுவாமி அன்னவனின் ஊரோ சிற்றூர்நாடு அவள் பெயரோ வள்ளி நாயகி அவளை ஈன்றதந்தையின் திருநாமமோ நம்பிராஜன் தாயின் திருநாமமோ நங்கைமோகினி ஆதலால் இம் மாதை தன் தாய்தந்தையர் தனது தினைபுனத்தை பக்ஷிகள் அழிக்காமல் பாதுகாக்கும்படி தினபுனத்தில் அனுப்பி இருக்கின்றார் ஆதலால் அவள் தினபுனத்தில் காவல் புரிந்து வருகின்றாள்.

தாங்கள் வேடனைபோல் வேடம்தரித்து கையில் கோதண்டபாணியாய் பொய்மானை தேடுவதுபோல் அவளிடம் வாதாடிமணம் புரிந்து வருவாய் என ஐயனே.

சுப் வ-ம். முனிவரே நான் அப்படியே செய்கின்றேன் சென்று வாருங்கள்.

நார வ-ம். அப்படியே மகாப்பிரபு

(நாரதர் போகிறார் கந்தன் மறைகிறார்.)

சீன் 8] [இடம் தினைப்புனம்

நடர், வேடன், வள்ளி, தோழி, நம்பிராஜன்

மந்திரிகள் முதலானோர்.

சுப்பிரமண்யர் வேடனைப்போல் வருகிறார்.

வள்ளி ஆயாலோட்டிக் கொண்டு இருக்கிறாள்.

சுப் தனி வ-ம். நாரதர் தெரிவித்த சிற்றார் காடு என்பது இது தான் போல் தெரிகிறதே. ஆதலில் அவர் தெரிவித்தமாது அதோ நிற்கின்றாளே அவள்தான் போல் தெரிகிறதே ஆ! ஹா! என்ன அழகு என்ன ரூபலாவன்யம் எனக்காகவேண்டி பிரமன்மன் இவளை படைத்தார் போலும் தெரிகிறது. இவளின் குறள் ஓசையானது குயிலையும் வெட்கச் செய்யும். என்பதற்கு ஐயமில்லை ஹா யான்பேன் இங்கு வந்தேன். என்னை யாராவது இங்கு அழைத்துவந்து விட்டு விட்டுனர்பார்த்தனையா இல்லை இல்லை அத் துஷ்டன் முன்என் பிதாவிடத்தில் மோகாஸ்திரபாணத்தை பிரயோகம்செய்து நிர்க்க எனது பிதா கோபமுற்று கண்ணை திறக்க பஸ்மீகரம் ஆய்விட்டதும் நினையாமல் என்னையும் கவர்க்க செருவம் கொண்டு என்னை இங்கு அழைத்து கொண்டுவந்து விட்டான் பார்த்தனையா அந்தமன்மதன் ஒருவன் தவிர என்னை யாரும் அழைத்துகொண்டு வரவில்லை என்று தின்னமாக கூறுவேன். ஆ! ஹா!

சக்ரவர்த்தி T. R. வெங்கடேசன் அவர்கள் பாடிவரும் விருத்தம்.

ஆலோல மென்று குறல்காட்டி இந்த அரும்புனத்திற்
சேலோடுகண்ணை தினைமீதுவைத்த சிங்காரிதன்னை
மாலோடுகாதல் மனையாட்டியாகவே இவளைக்கொண்டால்
பாலோடுசேர்ந்த பழம்போலினித்திடும் புணர்வேனே.

சுப் வ-ம். ஆஹா இவள் யாராய் இருக்கலாம் அந்த தெய்வலோகத்தில் அரசுபுரியும் எனது மாமாவாகிய தேவர்க்கரசனாகிய தேவராஜனின் மனைவியாகிய தேவரம்பையா.

இராகம் - கமாஸ் தாளம் - ஆதி.

பல்லவி.

ஆலோலம் என்று கூவினாள்
தினைபுனத்தில்
ஆலோலமென்று கூவினாள்
பரண்மீதேறி (ஆ)

அநுபல்லவி.

பாலோசுவைசேரமு தாலே மிதித்ததிந்த
பைங்கொடியாளிவள் இசைநலமே
இந்துவதனமுள்ள எழில்ஜோவிதமே (ஆ)

சரணம்.

கட்டாகரங்கள் மின்னவே சோ! சோ! எனும் சொல்
கனிவாய்தொடர்ந்து சொல்லவே
கமலமலரைநிகரும் பழுவைநிலவிய
கனகமணிபணிகள் எழிலோடு பழகிய
கரித்தவினை தானென உவமைஉரைக்க
கவிணைரிந்து பரன்
தனில்சிறந்து மகிழ்வாய்
மனதுவந்து மதிமயங்கி விரைவாய் (ஆ)

வடுகுகன்னடம் மலையாளம் முதல்திராவிடம்
மதித்த வேதத்தினிபவள் போலே
பினிதமான கியாமளஸ்வரியை
காணகாணன் இனிபவளே (ஆ)

சுப் வ-ம். ஹா இப்பூ உலகில் மானிட ஜென்மமாய் பிறப்பதும் புருட ஜென்மமாய் பிறப்பதும் அரிது அரிது ஆயினும் அழகி லும்சிறந்த இம்மங்கைபிறந்ததும் அரிது? தின்றாலும் அழகிய பழுத்தகனிபல்லவோ தின்னவேண்டும் சேர்ந்தாலோ இப்பேர்கொத்தமாது இடத்தில் அல்லவோ சேரவேண்டும் ஆயினும் நாம் இங்கேயே நின்று வீனில் வார்த்தையாடி கொண்டு இருப்பதுயாது பயன் இவள் அருகில் நெருங்கி அவ ளது மனோக்கத்தை அறியலாம்.

(சுப்ரமண்ய வேடன் வள்ளி யருகில் சென்று)

சக்கரவர்த்தி T.R. வெங்கடேசன் மிஸ். T.R ராஜலக்ஷிமி

இருவருக்கும் தாக்கம்.

இ – ம் ஹரிகாம்போதி தாளம் மிச்ர ரூபகம்

சுப். வலைதப்பிய குறமான்களே ஒரு
மானிங்கு பார்த்தீரோ நீங்கள்
தலைதப்பிய யெந்தனின் கணைதப்பி இவ்விடம்
களைத்துமான் வந்தது காணேனடியானும்

தாதி. ஆர்காணும் நீர் சிலைவேடரே மானை
ஆட்புரமே வந்து தேடுறீர்
நீர்கண்ட மானுக்கு கையுங்காலுமுண்டோ
நேருக்குநேராய் முன் நெருங்கிப் பேசுவதுண்டோ (வ

சுப். வள்ளிநாயகி இவ்வழியாகவே ஒரு
புள்ளிமான் ஓடிட பார்த்ததுண்டா
தெள்ளமுதே மனம்தானே மையல்கொண்டு
கள்ளமின்றி உன்பேல் காதலுற்றேன் கண்டு (வ)

வள். அத்தைமகனைப்போல் பேசுகிறீர் உந்தன்
ஆண்மைகளை யெல்லாம் காட்டுகிறீர்
எத்துகள்ளாமாய ஜித்துக்கள்ளாகாமப்
பித்துக்கள்ளா ஜாலவித்தைகள்ளா போம் போம் (ஆ)

வள். அடி சகி இவனது சர்வத்தைப் பார்த்தனையா மானைத்தேடு வதைப் பேசி கேளிக்கையிலிரங்கி விட்டானே. ஐயா வேடுவரே தாங்களின் மானனது இவ்விடம் வருவதென் காரணம்யாது

சுப். வ-ம். இல்லை என்மானை அடித்துத் துரத்தினேன் இவ்வழியாகத்தான் ஓடிவந்தது.

வளி வ-ம். சரி இவன் கூடியவரையில் சாமர்த்தியகாரனாகத்தான் தோல் தெரிய வருகின்றது. ஆயினும் ஏவேடா உன் மானுக்கு ஏதேனுமடையாளங்களுண்டா தெரிவிப்பாய்.

சுப். வ-ம். அதற்குத்தான் அடையாளம் வேண்டியதுண்டு

சக்கரவர்த்தி T. R. வெங்கடேசன் பாடிவரும்

வேடன் கலித்துறை

காயாதகானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே
மேயாதமான் புள்ளிமேவாதமான் விழிமாணந்தமான்
சாயாதகொம்பிரண்டே இருந்தாலும் தலைநிமிர்ந்து முட்டிப்
பாயாதமானென்று பட்டதுண்டோ உந்தன் பார்வையிலே

வள் வ-ம். பேஷ் பேஷ்! உன் கதை நன்றாய் இருக்கின்றது அடி சகி இவன் மகா அசாத்தியப் பேர்வழியாக விருக்கின்றான். தக்கபதிலளிப்பது நமக்கு நலம்.

மிஸ். T. R. ராஜ லக்ஷிமி பாடிவரும் வள்ளி விருத்தம்.

எந்தமானிடவேடன் நீர்காண் வேட்டை
கேற்றமான் மலையிலுண்டு இம்மான் நம்பி
தந்தமான் உன்வலைக்கு அகப்படாமான்
தைரியமான் சௌரியமான் ஜாதிமான்யான்
அந்தமானைத்தேடியே ஆண்பிள்ளை நீர்
அன்புடனே பெண்பிள்ளைக்கு அபம்போட்டு
சொந்த அம்மான் மகன்போல் ஏதேதே பிணைக்குகின்றாய்
என் சகிகளைவிட்டடித்து உனை துரத்துவேனே.

வள் வ-ம். அடி சகி இவன் மகா அசாத்தியப்பேர்வழியாக இருக்கின்றான். ஏ வேடா உன்னுடையமான் இவ்விடம் வரவில்லை, அப்புறம் விலகிப்போ.

சுப் வ-ம், என்ன என்ன! என்னுடைய மான் இவ்விடம் வரவில்லையா இப்போதுதான் இங்குவந்ததே

வள் வ-ம். வந்தால் இதற்குள் எங்கு மறைந்துபோய் விட்டது.

சுப் வ-ம். சரி ஆனல் வர வில்லையே யான் சென்று வரட்டுமா (போய்த்திரும்பி) ஏ! பெண்மணி இன்னொரு சந்தேக மெனக்கு

வள் வ-ம் அது என்ன அப்பேர்ப்பட்ட சந்தேகம்

சுப் வ-ம். என்ன சந்தேகமா தெரிவிக்கின்றேன். சற்றுகவனத்துடன் கேள். அதாவது இந்த அத்வான தினைப்புனத்தில் நீ தன்னந் தனிமையாகக் காவல்புரிந்து வருகின்றனையே. உனக்குத்திருமணம் ஆய்விட்டதோ இல்லையோ என்பதுதான் எனக்குச் சந்தேகம்.

வள் வ-ம். அடி சகி இவனைப்பார்த்தனையா, வழிக்கு வந்துவிட்டானே. இதுவரையில் அவன் சொந்தமானைத் தேடினான். இப்போது மாதரைத் தேடவாரம்பித்து விட்டான். இவன் வந்த வேலையைப்பார்த்துச் சொல்லாது என்னை கலியாணம் ஆகிவிட்டதா என்று கேட்கிறானே அடாவேடா அதையெல்லாம் உன்னை யார்கேட்டது மரியாதையாய் வந்தவேலையைப் பார்த்துச் சென்றுவிடு

சுப் வ-ம். வள்ளி என்ன பார்த்தனையா இதுவுடன் யான் எவ்வளவு மரியாதையுடன் பேசிக்கொண்டிருந்தேன் இடை நடுவே நீ அடேவேடா என்று சொல்ல ஆரம்பித்து விட்டாயே இனி மீது யான் அடியே வள்ளி என்றுதான் கூப்பிடவேண்டியது.

வள் வ-ம். அடே வேடுவப்பயலே என்னை அடியே எனச் சொல்லிப்பார்.

சுப் வ-ம். சொன்னால்தானென்?

வள் வ-ம். சொன்னலா? ஒரு கூச்சலிட்டால் என்னுடன் பிறந்த அண்ணன்மார்கள் உனது உடலை துண்டு துண்டாக சிதைத்து எரிந்து விடுவார் ஜாக்கிரதை,

சுப் வ-ம். கண்மணி! இதுவும் யான்செய்த பூஜாபலன் இத்தகைய ரூபலாவண்யம் பொருந்திய மாதரசியின் அருகில் யான் சமர்புரிந்து உயிரை விட்டால் உடனே எனக்குச் சொர்க்கம் கிடைக்கும் சேதியை நீ கண்டறியவில்லையா சரி அதெல்லாம் இருந்த போதிலும் இப்பொழுதே உனது கோபகிதிகளை யெல்லாம் ஒருவிதமாக அடக்கி என்பேரில் சற்று கிருபை கூர்ந்து சற்று கவனமாய்க்கேள்.

கொலை.

ஈரேழு பதினைந்து உலகங்களைப்படைத்த ஈசன்
என் இளப்பருவகாலனுக்கன்றே உன்னை சிலைபிடித்து
சிங்காரித்து உன் அங்கத்தின் மீது இரண்டதிசயங்கள்
ஏற்படுத்தி காமவண்டினம் கொண்டாடும் குளைத னிலே
கொக்கோக லீலைசெய்யும் சக்கரவர்த்தி T. R.
வெங்கடேசனை மகிழச் செய்யடி.

இராகம் - செஞ்சுருட்டி தாளம் ஏகம்

பல்லவி.

மாரன் விடுகணை பாயுது மாமயிலே
எதிர் வந்ததனைத்தாவி

அநுபல்லவி.

ஈராறுமங்கையின் பாதம் பணிந்திட்டேன்
நேரிட்டயிங்கென்னை ஏறிட்டுப்பாரடி

சரணம்.

வெந்திடும் தீப்படும் கொப்புறப்பாயுதடி
மனம் வெகுண்டுனைத் தேடிதடி
அந்த மதிக்கும் மலைக்கும் கடற்குள்ள
அர்த்தப்பட நீ வலைதது வெற்றிக்கிடமே திடுக்கிட
ஆரியர் பூசிக்கும் வீரிய சித்திரமே
உள்ளன்பர்கள் கோரும் காரியர் நாயகமே வருவாயடி
கண்ணும் பொணனும்வாடி எண்ணும் படிவரும்.

வள் வ - ம். அடி இவனைப் பார்த்தனையா? அடா வேடா

வள்ளி கலித்துரை.

சத்தியே மான்மனை தேடியே வந்திட்டவேடனே நீ
முத்தனைப் முருகனைப் முருகப்பனுவதைப்போல்
சித்துகள் பேசியே சரசமாடிடவந்தாய் சண்டாளனே உன்
பத்திரம் செல்லாது பாவியிவ்வனமவிட்டுப் பரிவாய் போடா.

சுப் வ - ம்: கண்மணி என்ன தெரிசித்தாய் முத்தனைப் முருகனைப் முருகப்பனுவதைப்போல் சித்து செய்ய வந்தேனென்று தெரிவிக்கின்றாய் என் பெயருப் உண்மையில் முருகப்பனே யான் சொல்லாமலேயே என் பெயர்தனை நீ தெரிந்துகொண்டதின் பேரில் யான் மிக்க சந்தோஷமுருகின்றேன் ஆதலால் இன்னும் உன் மனது சற்றேனும் இரங்கவில்லையே!

வள் வ - ம்: அடா சண்டாளனே! எனது தமையன்மார்கள் வருகின்ற நேரமாகின்றது. வீணில் ஏன் உன் உயிரை இக் காட்டகத்திற்கு பலிபிட்டுக்கொள்ளப் போகிறாய்.

சுப் வ-ம். அடி எனது காதலியே! உன்னைத்தவிர என்னுயிர் பெரிதல்ல ஆதலால் உன் விஷயத்தில் இப்பொழுதுயிர் போயினும் பாதகமில்லை எனக்கு உனது திருமுகம்கூர்ந்து ஓர் முத்தம் மாத்திரம் கொடு.

இதற்குள் வேடர்கள் வருகின்றனர்)

வள் வ-ம். அடேட துஷ்ட வேடுவப்பயலே பார்தனேயா எனது தமையன்மார்களும் நெருங்கிவிட்டனர் இதைக்கண்ட வேடனு யிருந்த வேலன் வேங்கைமரமாய் நிற்கின்றார்

வ்ள் வ-ம். அடி சகி வாதாடி இருந்த வேடன் எங்கு மறந்து வட்டான்

நம்பி வ-ம். குழந்தாய்! வள்ளி இத் தினைப்புனத்தை சரிவரப் பாதுகார்த்துக் கொண்டிருக் கின்றனையா, (திரும்பி பார்த்து) ஆஹா! இது எது அதிசயமாக இங்கு மரம் வளர்ந்து இருக் கின்றதே.

வள் வ-ம். பிதா! இது ஏதோ தெரியவில்லை புதுமையாகத்தான் இருக்கிறது.

நம்பி வ-ம். அடா என் புத்திரசிகாமணிகளே! இம்மரத்தினால் நமது பயிருக்கு தீங்குகள் நேரிடும்போல் தோன்றுகிறது ஆத லால் அதை வெட்டி தள்ளுங்கள்.

வள். வ-ம் பிதா! வெட்டவேண்டாம் இம்மரத்தினால் எனக்கு நிழலும் அதிக குளிர்ச்சியான வாடையும் உண்டாகின்றது ஆதலால் அதன் நிழலில் தினைப்புனத்தை காவல் புரிந்து வரு கின்றேன்

நம்பி வ-ம். என் கண்மணி வள்ளிநாயகி உன் மனதின் இஷ்டப் படியே நாங்கள் வெட்டவில்லை. யாங்கள் சென்று வருகின் றோம். தினபுனத்தை அதிக ஜாக்கிறதையாக பாதுகாத்துக் கொள் அடுத்தவாரத்திற்கெல்லாம் தினை அருவடையாகிவிடும்.

பிறகு உன்னை அரண்மனைக்கு அழைத்துச் செல்கின்றோம்.

(வேடர்கள் போகின்றனர் வேங்கமரமாயிருந்தவர் மறுபடியும் வேடர் ரூபம் கொண்டு வள்ளியிடம் வருகிறார்.)

சுப் வ-ம். வள்ளி இப்பொழுதுதான் உனது மனதை உணர்ந் தேன் அதாவது இவ்வளவு நேரமாக மேலுக்காயும் என்னை வெறுத்து பேசினாலும் என் மீது ஆனந்தம் கொண்டு எனக்கு மீளமுடியாத அபாய சந்தர்ப்பத்தில் உன் பிதாவுக்கும் தமை யன் மார்களுக்கும் சாக்குபோக்குகளை உரைத்து என் உயிரை

மீட்டியவிஷயத்தில் யான் உன்மீது அதிக ஆவல்கொண்டு இருக்கின்றேனே. ஆயினும் நமக்குகாலதாமதம் ஆகவில்லையா?

மிஸ் T. R. ராஜலக்ஷிமி சக்கரவர்த்தி T. R. வெங்கடேசன் இருவருக்கும் தர்க்கம்.

இராகம் - கல்யாணி தாளம் ஆதி.

சுப் ஆயலோட்டும் பெண்ணே அடி
ஆயலோட்டும் பெண்ணே
ஆவியே என்னுருயிர் சஞ்சீவியே மானதைனென்னும்
பாவியேகண்ணேயே என்மேல் தாவியே வாட்டுகின்றாளே

வள். மாயவேடா போடா அடா மாயவேடா போடா
மாது என்னிடம்நீயே வாது செய்யாதே பேயே
ஏது இக்கானகத்தில் ஏய்த்திடவந்திட்டாயோ மா

சுப் பாயும்தென்றலாலே மிகப் பாயும் பாயும் தென்றலாலே
பாங்கியே அங்கஜனவன் ஓங்கியே பாணம்போடுரான்
தேங்கியே எனதுஉயிர் நீங்குதே உடலைவிட்டு (ஆ)

வள் வாயும் கொந்திடாதோ பாவி வாயும் நொந்திடாதோ
வாடி பெண்முன்னதாகநீ தேடியே வந்தாயோமூடா
பேடியே அண்ணர்கண்டாலே கூடியே கொல்லுவார் கேடா

வள்ளி வ-ம் செட், சண்டாளா! பாவம் பயந்து ஒளிந்து கொண்டவனை நாம் காட்டிகொடுக்க தகாதுஎன என் தந்தையார் புண்ணியத்திற்குகாக யான் எனது தமயனார்களுக்கு ஏதோதோ சாக்குபோக்குகளை கூறி உன் உயிரை காப்பாத்திவைத்ததால் தீட்டியமரந்தனிலியே கூர்பாற்க சேர்ந்துவிட்டாய்நீ ஒழுங்காய் வந்தவழியே சென்றுவிடு இல்லாவிடில் மறுபடியும் எனது தமயனரை இங்குவரவழித்து அவர்களின்கை வீரவாளுக்கு உன்னை இறைவாக்கி விடுவேன் ஜாக்கிரதையாக சென்று விடு.

சுப் வ-ம்: அடி வள்ளி! எப்படிக்குயேற்ற வீராதிவீரர்தான் வந்துஎன்முன் எதிர்த்தாலும் என்னை என்ன செய்யமுடியும். என் ஆவியும் உயிரையும் நீயல்லவோ கொள்ளைகொண்டு இருக்கின்றாய்.

வள்ளி வ-ம்: சட்மூடா! இங்குநின்று வீண் வார்த்தை எல்லாம் பேசாதே யான் தனிமையாய் இருக்கின்றேன் அப்புரம் செல் குடிகேடனே.

(வள்ளியும் சகியும் போய்விடுகின்றார்கள் உடனே ஸ்ரீ கந்தன் வேடரூபத்தை நீக்கி பண்டார கிழவன்போல் நம்பிராஜனிடம் வருகிறார்.)

சீன் 9] [இடம் கானகம்

நடர். நம்பிராஜன், நம்பிராஜனின் புத்திரர், வள்ளி, பண்டாரம்:
பண்டாரம வருகிறார், நம்பிராஜன் தனது புத்திரர்க
ளுடன் அமர்ந்திருக்கின்றார்.

எமகாதகன் வ-ம்: பிதா! நமது வள்ளிநாயகிக்கு விவாகத்தைப் பற்றி ஏன் இனி கவனியாது இருக்கின்றீர்? கவனியாது இருந்தால் எப்படி அவளும் தினபுனத்தை காவல்புரிந்து இருப்பது நமக்கு அழகா?

நம்பி வ-ம்: மைந்தா! அதைப்பற்றியே யானும் அவளுக்காகவே கவனித்து வருகின்றேன் விவாகத்திற்கு வேளை குறிகிவிட்டால் நம்மாலும் முடியாது, நம்மை படைத்த ப்ரம்மனாலும் முடியாது தானாகவே எப்படியாகிலும் முடிந்துவிடும் மைந்தா.

(இதற்குள் பண்டாரம் வருகின்றார்.)

சக்கரவர்த்தி T. K. வெங்கடேசன் பாடி வருவது.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

கல்லார்க்குங் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்கும் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கு மதியே

வசனம். அரகரா சிவசம்போ மஹாதேவா.

நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே.

வசனம். அரகரா சிவசம்போ மஹாதேவா. (கல்லார்)

பண்டாரம் வ-ம்: சம்போ, சிவா, குருநாதா! நடக்க நடக்க முடியவில்லையே அப்பா உன்னையான கருணாகர பொருளே கார்த்திகேயனின் தந்தையே அரகரா!

எலிமூக்கு சிங்கன் வ-ம். பிதா! இதோ பார்த்தீரையா நல்லாத பழம் வருவது இதற்கு விருதாபிய காலத்தில் காஷயமும், கழுத்தில் ருத்திராக்ஷ மாலையும், நெத்தியில் பட்டை பட்டையாக பஞ்சாக்ஷரத்தையும் அணிந்து இருப்பதை.

நம்பி வ-ம்: மைந்தா! இப்பேர்ப்பட்ட மஹான் யல்லவோ தரிசிக்க வேண்டும்.

(பண்டாரத்தின் அருகில் சென்று)

நம்பி வ-ம்: எனது ஐயனே இவ் ஏழையான அடியேன் நமஸ்கரிக்கிறேன் தாங்கள் இவ்வளவு விருதாபிய காலததில் இவ்வளவ தூரம் எங்கு செல்கின்றீர் ஸ்வாமி.

பண்டாரம் வ-ம்: அப்பனே! யானே ப்ரம்மகுலத்தில் பிறந்தவன் என் அப்பன் பெயரோ திருபுரதகனன் என் பெயரோ முருகப்பன் என் தாய் பெயரோ மலைநீலி எனக்கு இருபது வயதில் எனது தாய் தந்தையர்கள் ஒன்று சேர்ந்து திருமணம் செய்து வைத்தார்கள் சில நாட்கள் சென்றதும் அகிலாண்டகோடி ப்ரம்மாண்ட நாயகரான ஸாக்ஷாத் ஜகதீசன் திருவடி காணும் பொருட்டு இல்வாழ்க்கையை அகற்றி துரவரம் புகுந்தேன் அன்று முதல் இன்றுவரை எத்தனையோ திவ்ய க்ஷேத்திரங்களை எல்லாம் சுற்றி அலைந்து தற்போது கன்னியாகுமரிக்கு செல்லுகின்றேன் அப்பா நீங்கள் யார்.

நம்பி வ-ம்: ஸ்வாமி! யான் இச்சிற்றூரை அரசுபுரியும் அரசன்

பண் வ-ம். இவர்கள் யார்?

நம்பி வ-ம். ஸ்வாமி என்மைந்தர்கள்.

பண் வ-ம். அப்பா தாங்களது நாமதேயம் என்ன?

நம்பி வ-ம். ஸ்வாமி அடியேன் நாமதேயன் நம்பிராஜன்

பண் வ-ம். மிக்க சந்தோஷம் அந்த ஜகதீசனின் அருளால் உங்களுக்கு மங்களம் உண்டாக வேணும்.

எலிமூக்கு சிங்கன் வ-ம். பிதா! பாவம் உப்பேர்ப்பட்ட விருதாபியான பண்டாரம் இவர் யாரோ இங்கு வந்துவிட்டனர். இவரை நாம் கொஞ்சகாலம் நமது சம்ரக்ஷணையில்வைத்து இருந்து அனுப்பலாம்.

நம்பி வ-ம், மைந்தா! நீ உரைத்ததும் மிக்க மேன்மையே நமது கண்மணியான வள்ளி நாயகியும் அத்வான கானகமாகிய தினபுனத்தில் அவள் தன்னந் தனிமையாய் காவல் புரிந்து வருகின்றாள் இப்பேர்ப்பட்டமஹானை அவளுடன் ஒப்பினவைத்தால் அவள் அதிக ஜாக்கிரதை உடன் பாதுகாத்துகொண்டு இருப்பாள். நமது புத்திரிக்கும் துணையாய் இருப்பதாகவும் இருக்கும் ஏதோ அன்னவளை அழைத்துவா?

(வேடன் போகிறான் வள்ளி வருகிறாள்)

வள் வ-ம். தாதா இவ்வடியாள் நமஸ்கரிக்கின்றேன்.

பண் வ-ம். குழந்தாய், மங்கலம் உண்டாகட்டும் எழுந்திரு அப்பனே இக்குழந்தையார்?

நம்பி வ-ம்: ஸ்வாமி! அடியேன் உடைய குழந்தைதான்.

பண்டாரம் வ-ம்: அப்பா! குழந்தையின் நாமதேயம் என்ன?

நம்பி வ-ம்: ஐயனே! குழந்தையின் நாமதேயம் வள்ளிநாயகி.

பண்டாரம் வ - ம்: ஹாஹா! என்ன ஆச்சரியம் குழந்தையின் அழகுக்கு ஏற்ற குணமும் குணத்திற்கு தகுந்த குரல் ஓசையும் நல் ஒழுக்கத்திற்கு தகுந்த நாமதேயமும் மிகவும் நன்மையாகத்தான் இருக்கின்றது அப்பனே, குழந்தைக்கு யார் பெயர் வைத்தது?

நம்பி வ - ம்: ஸ்வாமி! யான்தான் வைத்தேன்.

வள்ளி வ - ம்: தந்தையே! இப்பழுத்த பழம் யார்?

நம்பி வ - ம்: என் கண்மணி வள்ளிநாயகி! இவர் பர்பல தேசங்களுக்குச்சென்று, பற்பல க்ஷேத்திரங்களைகண்டு ஆனந்தித்த மஹான் தற்போது இவ்விடமடந்தார். ஆகலால் இப்பேர்ப்பற்ற மஹானை? உனக்கு துணையாக வைக்கின்றேன். இன்னவரை அதிக ஜாக்கிரதையாக இம்மஹானுக்கு தகுந்த பணிவிடைகளைபுரிந்து பாதுகார்ப்பாய் அம்மா.

வள்ளி வ - ம்: பிதா! அப்படியே தாங்கள் சித்தப்படி நடக்ககாத்துக்கொண்டு இருக்கின்றேன்.

நம்பி வ - ம். ஸ்வாமி! தாங்கள் எனதுகுழந்தையாகிய இவ்ச்சிறுமையுடன் தயவுகூர்ந்து அடுத்த கானகம்சென்று இருங்கள் இச்சிறுமி அதிக ஜாக்கிரதையாக பணிவிடை செய்து இருப்பாள்.

பண்டாரம் வ - ம். அப்பனே! இச்சிறுமியின் பாதுகாற்பை நம்பியா என்னைவிடப் போகிறீர் பேஸ், பேஸ்! இவளோ சின்னும் சிறுமி யானோ பழுத்த விருதாபியன் இச்சிறுமி என்னை என்ன கவனிக்கப் போகிறாள்.

நம்பி வ - ம். ஐயனே! நமது குழந்தை அப்படிக்கு எல்லாம் இருப்பவள் அல்ல ஆதலால் அவள் விஷயத்தில் தாங்களுக்கு கிஞ்சிதமேனும் கவலைவேண்டாம் கண்மணி வள்ளிநாயகி இப்பெரியாரை அதிக ஜாக்கிரதை உடன் பாதுகார்த்து வருவாய் அம்மணி.

வள்ளி வ - ம். பிதா! அவ்விதமே பாதுகாத்து வருகின்றேன் தாதா! வாருங்கள் செல்வோம்.

பண் வ - ம். குழந்தே! அதிக தூரம் செல்ல வேண்டுமோ?

வள் வ - ம். இல்லைதாதா அதோ தெரிகின்றதே, அக்கானகம்தான்.

பண் வ - ம். ஆனால்வா, போகலாம்.

(வள்ளியும் பண்டாரமும் போகின்றனர்)

சீன் 10.] [இடம் தினைபுனம்

(மடர் பண்டாரம் வள்ளிநாயகி முதலானவர்)

வள் வ - ம். இல்லை தாதா! நீ ஏன் இப்படி தல்லாடி தல்லாடி கொண்டு விழுகின்றாயே.

பண் வ-ம்: குழந்தாய்! உனக்கும் எனக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்றது. உன்னைப்பார்த்தால் வாலிபமான பெண்ணாய் இருக்கின்றாய் யானோ! பழுத்தபழமாய் இருக்கின்றேன். நீ என்னைப் பார்த்து, பழுத்தோலையைக்கண்டு குருத்தோலை நகைப்பதும் போல் கேட்கின்றாயே குழந்தாய் அது இருக்கட்டும்.

சக்கரவர்த்தி T. R. வெங்கடேசன்

மிஸ். T. R. ராஜலக்ஷுமி இருவருக்கும் தர்க்கம்.

பண். பசியாலுடன் மெலிந்தேன் ருசியாய் அன்னமளிப்பாய்
பாக்ய பதிஞரும் பக்ஷமுடனடைவாய் (ப)

வள். புனத்திலன்னமேதுஐயா புண்ணியரே ஓது
போதமுடன்யானதற்கு பாவைய நும் என்னசெய்வேன்

பண். கண்கள் ரெண்டும் சொருகுதடி காரிகைய வள்ளி
காது செவிடாகமாரி கருக்குதென்வயிற்றைமெல்லி

வள். தேனும் தினைதர்திடுவேன் திரமாய் நந்துவீர்
தேங்கிடாதீர் பசியால் ஏங்கிடவேண்டாமையா

வள் வ-ம். தாதா! தாங்களின் உண்டிபசிக்கு இத்விடத்தில் அண்ணம் ஏது இதுவோ தினபுணம் இங்கு இருப்பதோ தினை ஆதலால் எங்கேயாவது தேனைகொண்டுவந்து தேனும் தினையுமாக திரட்டிகொண்டு வருகின்றேன். அதை புசிக்கிறீரா:

பண் வ-ம்: குழந்தாய்!

விருத்தம்.

ஒப்புடன் முகமலர்ந்து உபசரித் துண்மைப்பேசி
உப்பில்லா கூழிட்டாலும் உண்பதே அமிர்த மாகும்
முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத்திடுவ ராயி
கப்பிய பசியினோடு கடும்பசியாகுந் தானே.

பண் வ-ம்: உன் மனப்பரிசுத்தமாய் எனக்கு நீ என்ன அளித்த போதிலும் அதையான் தேவாமிர்தம் போல் ஏற்றுக்கொள்வேன், புறம் ஒன்று நெஞ்சில் ஒன்று எண்ணிக் கொண்டுவந்தால் எனக்கு உண்பதற்கும் ஏலாது ஆதலால் எதையாயினும் அன்போடு இருந்தால் கொண்டுவா சீக்கிரம்.

வள் வ-ம். தாத்தா! தாங்கள் மனது இஷ்டப்படியே யான் பரிசுத்தமானதோடு கொண்டுவருகின்றேன்.

(தேனும் தினையும் திரட்டிகொண்டுவந்து பண்டாரத்தினிடம் வள்ளிநாயகிகொடுக்கபண்டாரம் தினையை கையில் வாங்கிக்கொண்டு கைகால நடக்குவதுபோல் பாவனை காட்டி தினையை கீழுமேலும்மாக கொட்டுதல்)

வள் வ-ம். தாத்தா! யான் எவ்வளவு ஸ்ரமத்தோடு தேன் கூண்டை அழித்து தேனை கையில் எடுத்து தினையை என் கரங்கள் நோகும்படி இடித்து திரட்டிய தினையை கீழ் எல்லாம் கொட்டுகின்றீர்களே.

(பண் வ-ம். வள்ளி! நானோ விருத்தாப்பியன் இத்தட்டில் இருக்கும் போதே கைகால்கள் எல்லாம் நடுக்கலாய் இருக்கின்றது இத்தினையானது என் பசிவாய்க்கு எப்படி எட்டபோகிறது. ஆதலால் நீயே எனக்கு,

இராகம் - பைரவி தாளம் - ஆதி

வன்னத்தினைமாவை தெள்ளியேயுண்ணும்
வாழ்க்கைக்குறக்குல வள்ளியே யுயிர்
வரங்கப்பிறந்திட்ட கன்னியே
வட்டமேருவை நிகராகிய
புயமீதணி பலமாமணி
மாலைப்படிமரனத் துள்ளயே விழ
வான்மதி வீசுந்தி யல்லியே
கன்னத்திற்குயிற் சத்தமே கேட்க
கன்யதுபாரென்று சித்தமே மயக்
கஞ்செய்யுதேயாசைப் பித்தமே யுடல்
கனலெறிய மெழுகாயின
தினியாகிலு படிபாதகி
கட்டாயம் நீயாரு முத்தமே தந்தால்
கைதொழுவேனுனை நித்தமே
வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கல்லோவன் நெஞ்சமோ கொண்ட
வையற்பயித்தியங் கொஞ்சமோ சிலை
மதன் சோதரி யெனையாதறி
மனவாழ்க்கையில் சுகமாகிய
மார்க்முனகமென்ன நஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும் பஞ்சமோ
தேடக்கிடையாத சொர்ணமே உயிர்
சித்திரமேமட வர்ணமே அதோ
சிக்குதுபால்தயி ரன்னமே பொரு
சிலைவேற்குற மகளாகுநின்
கயலாம்விழி யெனையேதுயர்
செய்வதுகண்டிலை யின்னமே என்ன
செய்தேனோதான்பழி முன்னமே (வன்ன)

(பண் வ-ம். வள்ளி கைகால் எனக்கோ அதிக நடுக்கலாய் இருப்பதால் நீயே என்மீது கிருபைகூர்ந்து தினையை ஊட்டுவாய் அடி கண்ணே!

வள் வ - ம். அப்படியே ஊட்டுகின்றேன் தாத்தா,

(வள்ளி தினையை ஊட்ட, பண்டாரம் நெஞ்சியில் அடைத் கொண்டதுபோல் பாவனைக்காட்டி)

பண் வ - ம். அடி சண்டாளி, அறுதியான என்னை இக்கதிக்குள் ளாக்கலாமா அடி பாவி, என்னை கொல்லவல்லவோ நினைத்து யிருக்கின்றாய் ஹா! என்ன செய்வேன் மாரை யடைக்கின்றதே, மழுக்கங்களாகுதே, கண்கள் தணருதே. ஹா! அடி வள்ளி இப்பொழுது என் உயிர்போவதும் வருவதுமாய் இருக்கின் றது. ஆதலால் இப்பொழுதே என்னை தண்ணீர் இருக்கும் தடாகத்திற்கு அழைத்து கொண்டு போவாயானுல் யான் தண் ணீரை வைரார குடித்துயான் உயிர் உடன் ஜீவிப்பேன் இல் லாவிடில் என் பிராணம் போய்விடும்போல் இருக்கின்றது.

வள்ளி வ - ம். தாதா! அப்படியே அழைத்துச் செல்லுகின் றேன வாருங்கள்.

பண் வ - ம். அடி என்னை தன்னம் தனிமையாக வரச்சொல்லு கிருய்.

வள் வ - ம். இல்லைத் தாத்தா உன் கரத்தில் பிடித்து இருக்கும கழியை பற்றிகொண்டு வாருங்கள்.

பண் வ - ம். உன் மனது இஷ்டப்படியே செய்.

(பண்டாரம் கழியைப்பிடித்துக் கொண்டே வள்ளியின் கரத் தை பிடிக்க எத்தனித்து கரத்தை அருகில் கொண்டு வருகிறார் இத குள் வள்ளி)

வள் வ - ம். ஏ! கிழப்பிணமே! என்ன கரத்தை என்யருகில் கொண்டு வருகின்றனயே.

பண் வ - ம். யாகோ பழுத்தபழம் எங்கையாவது கீழேவிழுந்து விடப்போய் கின்றேன் என்றுதான் உன் கரத்தை ஆதாவாகப் பிடித்தேன்.

வள் வ - ம். நீ விழுந்துதான் சாவே நீ இருந்து யாரை ரக்ஷிக்க போகின்றாய் (உடனே கையை எடுத்து கொள்ளுகின்றார்)

பண் வ - ம். என்னைச் சேர்ந்தவள் யாரோ அன்னவளைத் தான் யான் ரக்ஷிக்கபோகின்றேன்.

வள் வ-ம். ஹா! தாத்தா உன்னைச்சேர்ந்தவள் யார்? அவள் எங்கு இருக்கின்றாள்?

பண் வ - ம். ஹா! அவளா, எங்கும் இருப்பாள் காட்டிலும் இருப்பாள் வீட்டிலும் இருப்பாள் எனயருகிலும் இருப்பாள் என் உடன் வார்த்தையாடிக் கொண்டும் இருப்பாள்.

வள் வ - ம். ஹா! இக்கிழம்பிணத்தின் றொக்காரத்தைப் பார்த்தனையா! என்ன வார்த்தை யாசென்றீர் ஹே கிழவா! அதிகமாய் வார்த்தையாடாதே ஜாக்கிரதை.

பண் வ - ம். ஹே! வள்ளி யாரோ கிழவன் என்னை காடுபோவன விடுவாவனவென்று அழைக்கின்றதே யான் என் செய்வேனடிக் கண்ணே!

வள் வ - ம்: ஜாக்கிறதை இன்னொருமுறை அவ்வாறு வார்த்தையாடினாலும் என்மீது காத்தை நீட்டினாலும் அப்படியேதள்ளி மடிய செய்திடுவேன் பார்.

பண் வ - ம்: இல்லே இல்லே! இனிமேல் காந்தை நீட்டமாட்டேன் வா சீக்கிரம் செல்லுவோம். (இருவரும் போகிறார்கள்)

சீன் 11. [இடம் கேணி:

நடர் - வள்ளி பண்டாரம்

(வள்ளியும் பண்டாரமும் வருகின்றனர்)

வள் வ - ம்: தாத்தா! இந்தச்ஜுனையில் இரங்கி தாகவிடாவைத் தீர்த்துக்கொள்ளுகின்றீருபாருங்கள்.

பண் வ - ம். பேஷ்! பேஷ்! காரியம் நன்றாயிருக்கிறது. இந்த சுனையில் என்னைத்தள்ளிவிட யோஜனை செய்துதான் அழைத்துவந்தனையா?

வள் வ - ம். தாத்தா! தாங்களுக்கு இச்சுனைபிடிக்காவிட்டால் அடுத்தசுனையைப்பார்க்கலாம்வாருக்கள் (இன்னொருஜுனையருகில் சென்று) இதில் இரங்கிதாகம் அருந்துகின்றீராபாருங்கள்.

பண் வ - ம்: கண்ணே! அப்படியே இறங்கி அருந்துகின்றேன்.

(ஜுனையிலிரங்கி கால்தவரி விழுந்தவர்போல் பாவனைக்காட்டி)

பண் வ - ம். அடி வள்ள! யான் கால் தவரி விழுந்து விட்டேன் யடி என்னை தூக்கிவிடடி.

வள் வ - ம். ஹா! கருநாகர கடவுளே இந்த பாஷான கிழப்பிணத்தை யான் தெறியாமல் அழைத்துவந்து விட்டேனே யான் என் செய்வேன் ஹே! தாத்தா இக்கழியை பிடித்துக்கொண்டாவது கரைமீது ஏரிவருவீர்.

பண் வ - ம். அடி சண்டாலி நீ முன் சொன்னது சரியாகவே முடித்து விட்டாயே விருதாபியாகிய என்னை இப்படி சித்திரவதை செய்துவிட என் தொண்டையைப்பிடித்து ஓரே அழுத்தாக அழுத்துவிடலாமே ஹா! ஜகதீசா; என் உயிர்போய்விடுவது போல் இருக்கிறது.

வள் வ - ம். தாத்தா! தாங்களே யானும் கேணையில் தள்ளினேன் ஹா! தாங்களே விழுந்துவிட்டு இப்படி என்மீது பழி சுமத்து

வது தாங்களூர்குதீதியா? இதோ என்கரத்தை நீட்டுகின்றேன் கரத்தைப் பிடித்துக்கொண்டு கரை மீதில் யேறுங்கள் தாத்தா (வள்ளியின்கரத்தைப் பிடித்துக்கொண்டுபண்டாரம் கரை மீது யேறுகிறுர்.)

பண் வ-ம். அப்பா! இப்போதுதான் தாகம் தீர்ந்தது. ஆனல் இன்னும் ஒர் குறை இருக்கின்றது. அது விஷயத்தில் வள்ளி நீஎன்கருணைவைக்கப்போகின்ருயோ இல்லையோ தெரியவில்லை?

வள் வ-ம். அத்தகையான கருணை என்ன தாத்தா

பண் வ-ம். அதையாய் கேட்கின்ருய் வள்ளி.

சக்கரவர்த்தி T.R. வெங்கடேசன் மிஸ். T.R. ராஜலக்ஷிமி

இருவருக்கும் தாக்கம்.

இ-ம் அடாணு தாளம் ரூபகம்

பண். தாகவிடாயைப்போல் மோகவிடாய் தீரும்
தையலரேவள்ளிப் பெண்ணே

வள். தொண்டுகிழமென்று தோகையாள் விடுத்தேன்
தொந்திரை செய்யாதே. ஐயா

பண். உன்னைவிடயெந்தன் உள்ளமிசை யாது
உத்தமியேவள்ளிப் பெண்ணே

வள். என்னுலுந்தனுயிர் எமனுலகே கிட
ஏனோவிதிவச மையா

பண். ஆர்பழியானுலும் ஆண்பழி யாகாது
ஆரணங்கே கேளும் பெண்ணே

வள். பெரியாரென உனை பாவித்தேனின்னமும்
பேசாமற்போவினி ஐயா

பண் வ-ம் வள்ளியான் ஆறுமற்றபஞதியாய் வந்து எனக்கு நீ இடம் யளித்து வேண்டிய பணிவிடைசெய்து என் உண்டிபசியை தணிக்க தேனையும் தினைமாவையும் திரட்டினதாய் தாகத்தை தீர்க்கதண்ணீருமருந்தச்செய்தாய் இவையல்லாம்செய்து யாது பயன் தற்போது யான் கொண்டுள்ள உன்மீது மோகத்தை தனித்தால் அல்லவோ உனக்கு மோக்ஷம் கிடைக்கப்போகிறது

வள் வ-ம். ஹேதாத்தா! மோக்ஷம் என்றம் பேராந்தலாகரம் எனக்கு கிடைக்காமலும் போனுலும் போகட்டும். இனி அவ் விதமாகிய துர்வார்த்தைகளை பகரவேண்டாம்.

பண் வ-ம். கண்மணி! யானோ பழுத்தப்பழம் என் காயமோ விருதாபகாயம் நீ ஒன்றும் யறியாத தங்கவதனுள் இப் போது எனக்கு உனது அழகிய பவழயிதழ்வோடு என் கன் ணத்தில் ஓர் முத்தம் யளிப்பாயாகில் உனக்கு ஸாலோகஸாமீப

ஸாரூப ஸாருத்யபதவிகள் கிடைக்கும் இல்லாவிடில் என் ப்ராணம் என்னைவிட்டு நீங்கிவிடும் பழி உன்மீது சுமைத்துவிடுவேன்

வள் வ-ம். பேஸ் பேஸ்! நன்றாய் இருக்கின்றது ஐயோ பாவம்! நல்லாக கிழவன் யாச்சுதே யன்றுவேண்டிய உபசாரங்கள் புரிந்தால் கடைசியில் கலியாணம் செய்துக்கொள்ள சொல்லுகின்றாய் கிழப்பிணமே இதற்கு ஆசையைப்பார்.

பண் வ-ம். பெண்நங்கைகள் யெல்லாம் இப்படிதான் மோசம் போவது என்ன? இது தெரியாதா என்னடா இவன் பழுத்தப்பழம் யாச்சுதே இக்கிழவனை காடுவா வென்றும் வீடுபோ வென்றும் சொல்லுகின்றதே இப்படிக்கொத்த பழுத்தப் பழமாகிய கிழவனை கலியாணம் செய்து கொள்ள கூடுமோவென்று இதில் காரணத்தை அறியாமல் பலமாக கோபித்துக் கொள்கின்றனயே யாதுபயன்! எதற்காக இப்படி யெல்லாம் செய்தேன் யென்றால் உன்மனதை சோதிக்கும் பொருட்டுத்தான் என் யென்றால் இவ்வனந்தரத்தில் நீ தனிமையாக இருந்துவருகின்றாயே யாராவது ஒருவன் என்னைப்போல் அபிநயணத்திடில் அன்னவள் மீது பேறானந்த காதலிப்பாயோ? என்னமோ வென்றுதான் நான் உன்னைச் சோதித்தேன் !தவிர வேறு ஒன்றும் இல்லை வள்ளி! ஆதலால் இருக்கட்டும உன் கரத்தை நீட்டுப் பார்க்கலாம்.

(வள்ளியின் கரத்தை பிடித்துக்கொண்டு கிழவன் உற்று நோக்குகின்றார்.)

வள் வ-ம். என்ன தாத்தா? இப்படி உற்றுப் பார்க்கின்றீரே தாங்களுக்கு யதாவது ஆரூடம் தெரியுமா என்ன?

பண் வ-ம். நானா! ஆரூடத்தில் கைதேர்ந்தவன் தான்.

வள் வ-ம். அப்படியானால் எனக்கு ஆரூடம் சொல்லுங்கள் தாத்தா பார்க்கலாம்.

பண் வ-ம். அதற்காகத்தான் உன்கையையுற்றுப் பார்த்தேன் இதற்குள் நீ கோபித்துக் கொண்டாயே?

வள் வ-ம். இல்லை தாத்தா! கையைப்பாருங்கள்.

பண் வ-ம். வள்ளி! உன்மனதில் மஹாப்பேருசையான காரியம் யிருக்கின்றதே? இதற்குத்தானா யொன்றும் தெரியாதவள் போல் கலியாணம் வேண்டாதுபோல் நடிக்கிறாய்.

வள் வ-ம். இல்லை தாத்தா யான் எப்பொழுதுமே தின புனத்தில் காலத்தை கழிக்கவேண்டுமோ! அல்லது என் தந்தையாருக்கேனும் என்னை திருமணம் செய்துக் கொடுப்பாரா? அதை மாத்திரம்! சொல்லுங்கள்.

பண் வ-ம். என்ன திருமணம் செய்துக் கொடுப்பாரு என்று கேட்கின்றாயா நீ தான் ஒரு ஆடவனுடன் தெரியாமல் பேசிக்கொண்டு இருக்கிறாயே ஹா! ஹா! வள்ளி நீ பிடித்திட்ட மரம் அது யல்லவோ? சரியான புளியாமரம் உனது அதிஷ்டம் யாருக்காவது வாவென்றால் வரப்போகின்றதா?

வள் வ-ம். தாத்தா! என்ன விலையாடுகின்றீரே அன்னவர் பெயரை சொன்னார் யல்லவோ நம்புவேன்.

பண் வ-ம். நீ உனது கண்ணால் காணாத காதலிக்கும் நாகயனின் நாமதேயத்தையா கேட்கின்றாய் அப்புண்ணியவரின் நாமதேயத்தை வாயால் யுரைப்பதற்கே அருஞ்சோதி பதவி கிடைக்கும் வென்றால் அன்னவரை சதாகாலம் காதலித்து யிருக்கும் நீ எத்தகை மேலான ஸ்திதியில் இருப்பாய்.

வள் வ-ம். தாத்தா! யார் அது அத்தகையான புண்ணியவந்தர்?

பண் வ-ம். வள்ளி! யார் என்று அன்னவரைக் கேட்கின்றாய்? ப்ரம்மாவுக்கும், அறியிக்கும் சச்சரவு யேர்ப்பட்டபோது ப்ரம்மாவுக்கும் முடியும் அறியிக்கு பாதமும் காட்டிய ஏகப்பரம்ஜோதியான கருணாகரனின் கனிஷ்ட புதல்வனாகிய கழுகுமலைமீதுபுள்ளிமயிலோடு சத்துருசங்காரவேலுடன் அமர்ந்து இருக்கும் அக்கந்த தேசிகனைத்தான் காதலித்து யிருக்கின்றாய்.

வள் வ-ம். தாதா தாங்கள் எவ்விதம் தெரிந்துக் கொண்டீர் அவர் கட்டாயம் வந்து என்னை மாலையிடுவாரா.

பண் வ-ம். அதற்கென்ன சந்தேகமா? காலம் நெருங்கி விட்டது, இப்பவோ, பின்னையோ, இன்னும் சற்று நேரத்திலோ உன்னுடன் அவர் நேரிலும் பேசியிருந்தாலும் பேசி யிருப்பார் நீ மாத்திரம் என்னோடு பேசிக்கொண் டிருக்கின்றாய் இதை யார்தான் அறியப்போகின்றார்.

வள் வ-ம். தாதா தாங்கள் எப்போதும் குழந்தையாடுவதுபோல் விளையாட்டாகவே ஆடுகின்றீர் நான் சென்று தினப்புனத்தை பார்வையிட்டு வருகின்றேன் தாங்கள்சற்று இங்ஙனேயே இருங்கள்.

பண் வ-ம். அடி வள்ளி இப்பொழுது நான் கூறுவதெல்லாம் விளையாட்டாகத்தானிருக்கும் சரி அது இருக்கட்டும் என்னை இங்கே விட்டு செல்வதாக சொல்லுகின்றாய் பேஷ் நியாயம் நன்றாயிருக்கின்றது. இங்கிருக்கும் மிருகங்கள் வந்து என்னை கடித்து கொன்றுவிட்டால் உனக்குத் சல்லை ஒழிந்துவிட்டது என்று நினைக்கின்றனையா.

வள் வ-ம். தாதா என்ன இந்த மிருகங்களுக்குத்தானா பயந்து விட்டீர்

பண் வ-ம். பெண்ணே! மிருகங்கள் என்றால் யார்தான் பயப்பட மாட்டார்கள்.

வள் வ-ம். தாத்தா! உன்னைபயமுறுத்தும் மிருகங்கள் அப்படி கானகத்தில் ஒன்றும் இல்லை.

பண் வ-ம். நீ அப்படியுரைக்காதே மிருக ஜாதிகளுக்கு எல்லாம் ஏகாதிபதிய ய் விளங்கும் சிங்கம், கரடி, புலி, இருக்கின்றதே தெரியாதா?

வள் வ-ம். அந்த மிருகங்கள் யல்லாம் என்னைக்கண்டால் மிகுந்த ஆசையோடு விளையாடிக்கொண்டுபோகுமே

பண் வ-ம். அதைவிட துஷ்டமிருகம் ஒன்று யிருக்கிறதே நீ அதை பார்த்து யிருக்கின்றாயா?

வள் வ-ம். அது என்ன மிருகம் தாத்தா.

பண் வ-ம். அதை உனக்கு உரைக்கக்கூடாது.

வள் வ-ம். அப்பேர்ப்பட்ட மிருகம் என்ன மிருகம் தாத்தா?

பண் வ-ம். நான் சொன்னமாத்திரத்தில் பயந்துவிடுவாய்.

வள் வ-ம். யான் ஒருகாலமும் பயப்படமாட்டேன் தாத்தா

பண் வ-ம். நீ எந்தமிருகத்துக்குமே பயப்படமாட்டாயா?

வள் வ-ம். யான் எப்பேர்பட்ட மிருகத்திற்குர் பயப்படமாட்டேன் தாத்தா

பண் வ-ம். வள்ளி புலி, கரடி, சிங்கம், சிருத்தை இதற்குபயப்பட மாட்டாயா

வள் வ-ம். புலி, கரடி, சிறுத்தை இவைகள் எல்லாம் எனக்கு எலி போல்தான்

பண் வ-ம். இப்பேர்ப்பட்ட மிருகங்கள் எல்லாம் உனக்கு எலியா குமானால் அந்த அல்பமிருகம் உனக்கு ஒரு ஈயைப் போலவு தான் யிருக்கும் என்று தெறிகின்றது

வள் வ-ம். அது என்ன மிருகம் தாத்தா?

பண் வ-ம். குழந்தே! அது என்னமிருகமா? அதுதான் தெரியாதா உனக்கு

வள் வ-ம். என்னதாத்தா அது

பண் வ-ம். அதுதான் பெரிய மிருகம் போல் இருக்கிறதே அதற்கு கால் நான்கும் கை மாத்திரம் ஒன்று யிருக்கிறதே அதுதான்:

வள் வ-ம். அது என்ன மிருகம்தாத்த அத்தகையானது.

பண் வ-ம். அதுதான் வள்ளி யானை

வள் வ-ம். தாத்தா! தாத்தா! தயவு கூர்ந்து அதன்பெயரைத் தெரிவிக்காதீர் அதை கேட்கும்போதே எனது உடல் நடுங்குகிறதே

பண் வ-ம். சரிதான்? (தனி இனி யிவள் நமது வலயிலேயே அகப்பட்டுக்கொண்டாள் நாம் கொண்ட மகாரிக்கை சித்தியாகி விட்டது. ஆதலால் நமது அண்ணாவாகிய கணபதியை நினைத்து யானையாக வரச்செய்து இவளை பயமுறுத்தி விவாகம் செய்து கொள்ள வெண்டியது தான்.

பண்டாரம் தனியக ஸ்லோகம்

விக்நேஸ்வர சில வம்போதரஜயநாய கணேசரணம்
விநாயகனே சரணம் பாம்பணிந்த சிவசாம்பவி மகிழும்
காம்பீரவடிவே ஓ பரமனமுனை
ஓங்காரமீதிமே உன்னைவிட வேறு துணை ஏது குருபரநிதியே.

பண்டித மோதிலால் நேரு என்ற மெட்டு.

பல்லவி.

ஆனை முகமாய் விளங்கும் என்
அண்ணனே வாரும்
அண்ணனே வாரும் இரத
அடியனின் நேரும் (ஆனை)

அன்பான வெள்ளியின்மீதே யான்
ஆவல் கொண்டு நீப் பொழுதே
ஆனைவடிவாய்போதே என்
அண்ணனே வாரும்
அண்ணனே வாரும் கொண்ட
கோரிக்கையை நிரும் (ஆனை)

தொகையரு

கானகுறைவெள்ளியை கலியாண செய்திட காடடில் வாழ்
வேடனைப்போல் உருவெடுத்தேன் யான் கொண்ட
கோறிக்கையை நிரவேற்றவே. யானைரூபமாய் வந்துஎன் யதுகி
னில் நின்று என்னை யாதிருப்பாய் என் அண்ணனே.

ஷ சரணத் தொடர்

ஆனையுருவாக நீரும் இந்த
ஆரணங்கைப்பல் முன்னே வாரும் (ஆனை)

தொகையரு.

என் அண்ணனே அகிலாண்டகோடி
ப்ரம்மாண்ட நாயகனான ஆனை முகனே
ஆருக்கும் அஞ்சாத இந்த ஆரணங்கை
வள்ளியை அவரிட செய்வீருகில் யான்
அன்புடனே சீக்கிரத்தில் மணம்
புரிந்து கொள்வேன்

ஷ சரணத்தொடர்.

பருந்துமேவாரும் பாலன்
வெங்கடேஷன்க்காரும் (ஆனை)

(பண்டாரம் நினைத்தவுடன் யானைவருகிறது இதைக் கண்ட
வள்ளி பண்டாரத்தை கட்டிக்கொண்டு)

வள் வ - ம்ம் தாத்தா! யான் என் செய்யப்போகிறேன்? அதோ
ஒரு மதம் கொண்டயானை யோடி வருகின்றதே ஐயோ!

பண் வ-ம். இது என்ன என்னை இழித்து கட்டிக்கொண்டனேயே நீ சிங்கத்துடன் விளையாடும் தீரபெண்மணி நீயே பயந்தால் யான் தல்லாத கிழவனுகிய யான் என்னசெய்ய போகிறேன்!

வள் வ-ம். தாத்தா! தாங்கள் யிவ்விதம் யுரைத்தால் எப்படியாகிறது தாங்களை நம்பி யல்லவோ எனது பிதாசென்று யிருக்கின்ருர்.

பண் வ-ம். இப்படியானல் உன்னையான் எவ்விதமாயினும் காப்பாற்றுகிறேன். என்னை கலியாணம் செய்து கொள்ளுகிருயா?

வள் வ-ம். அதையெல்லாம் பின்பு யோசிக்கலாம் முன்னே இதை கவனியுங்கள் தாத்தா?

பண் வ-ம். அதையல்லாம் எனக்கு தெறியாது. உன்னுடைய ஆபத்தை யான் தீர்க்கின்றேனே, என்னுடைய மோகத்தை நீ தீர்க்கவேண்டும். என்ன தெரிவிக்கின்ருய்!

வள் வ-ம். தாத்தா தாங்களுடைய மோகத்தை யான் அப்படியே தீர்க்கிறேன் யானையை போக சொல்லுங்கள்

பண் வ-ம். ஹே! யானைவர்க்கர்க்கத்துக்கு யெல்லாம் அதிபதியாய் விளங்கும் யானையே வள்ளி என்னை கலியாணம் செய்து கொள்கிருளாம் நீ தயவுசெய்துபோ!

(யானை போய்விடுகிறது

பண் வ-ம். யானையும் போய்விட்டது இப்பொழுது என்ன சொல்லுகின்ருய் அடி வள்ளி

வள் வ-ம். இந்த கிழப்பிணத்திற்கு ஆசையைப்பார் ஹே கிழவா! யானையை நீ போவன சென்னதில் யானைபோய்விட்டதா? அதற்காக கலியாணம் செய்து கொள்ளவேண்டுமோ கல்லியாணமாவது கண் அகலமாவது

பண் வ-ம், சரிசரி நீ என்னை கலியாணம் செய்துகொள்ள மாட்டாளையா யானையே? என்னை கலியாணம் செய்து கொள்ளமாட்டாளாம் நீ சீக்கிரம்வா.

யானைவருகிறது வள்ளி அலரி தனியாக நின்று பாடுவது

இராகம் சேஞ்சுருட்டி புன்னுகவராளி தாளம் ஆதி

நாத சங்கீத பொன் மணிமண்டபம்
நயா னத்திடையினில் நடனங்கண்டேன்

நாவைமடக்கியே மேல்வாசல்
நளினமதுவருந்த அருள்வாயே
ஞானவேலா ஞானவேலா
நவமணிபதித்தொளிர் ஞானவேலா

முத்தோடு பவளமும் பச்சையுமாய்
முச்சுடரொளி மணி முழக்கமென்னும்

சுத்தஅற்புதசத விதநாதம்
தொனிக்கு தெனக்குள்
சுருதிலயத்துடனே

சோதியாதே சோதியாதே
சுதனென்னை இனி பரி யோதியாதே
கமலமென்மலரிதழ் மனைவாழும்
கௌரி குண்டலி துயில் கலைந்திடவே
சமரசமோன சுகாதீத
தாரகத்ப்ரணவச் சுழிமுனையின்

சாமகீதா? சாமகீதா?
தவமகரிஷிமகிழ் சாமகீதா
பஞ்சுபோற்பட்ட துன்பம் போதாதா

பாலனை வெறுப்பதுண்டோ மாதா
கெஞ்சம் தயவுசெய்ய லாகாதோ
குழந்தை நான் சொல்வதெல்லாங் கேலாதோ

கோபமாமோ கோபமாமோ
குழந்தை என்மீதில் மனஸ்தாபமாமே

வள் வ-ம். தாத்தா! இவ்வடியாளை தயவுகூர்ந்து காப்பாற்றுங்கள் தங்களை யெப்படியும் மணம் புரிந்து கொள்ளுகின்றேன் யானையை போகச் சொல்லுங்கள்

பண் வ-ம். வள்ளி இனி உன்வார்த்தையை நம்பமுடியாது உன் குலதெய்வமாகிய கழுகுமலையின்மீது அமர்ந்திருக்கும் கந்தன்மீதுசத்தியம் செய்தால் யானையை பொகச் சொல்வேன்.

வள் வ-ம். தாத்தா யெங்கள் குலதெய்வமாகிய கழுகாஜல கந்தன் மீது சத்தியம்மாகவே தாங்களை மணர்ந்து கொள்ளுகின்றேன்.

பண் வ-ம். யானையே தயவுசெய்துபோ

(வள்ளிதனியாய் நின்று)

வள் வ ம். ஹா என்செய்வேன் ஹே கருணாகரனின் கனிஷ்ட புதல் வனான இளைய குமாரனே ஈராறு கரத்தோனே யான் தாங்களை யல்லவோ மணசவேண்டி வெகுநாட்களாக ஆவல்வுற்று யிருந்தேன் அவ்வாவலை யோக்கி இவ்வாறு சென்ற விருதாபியரை யென் மூடமதியால் சத்தியம்செய்துவிட்டேனே ஹா கந்தனே (திருப்பிப்பார்த்து) ஹா யென்ன இது ஆச்சரியமாய் யிருக்கிறதே! இங்கு நின்று யிருந்த பண்டாரத்தையும் காணேமே ஏ! கந்தா தேவர்க்கதிபா தேவாதிதேவா வாணவர் போற்றும் வடிவேலா இதுவும் உனது திருவிளையாடலாய் இருக்குமோ? (இதற்குள் சுப்ரமண்யர் மயில்வாகனம் மீது பிரதக்ஷணை)

சுப் வ-ம். ஏ! வள்ளிநாயகி ஒன்றுக்கும் பஞ்சாதே வேடனாகவந்தவனும்யானே, வேங்கமரமாய் நின்றவனும் யானே, பாண்டாரமாய் வந்தவனும் யானே, பிறகு, யெனது அண்ணாவாகிய கணபதியை யானே உருவமாக்கி வரவழைத்தவனும் யானே. உன் முன்னில் மதம்கொண்ட யானையைப்போல் வந்தவர்தான் எனக்கு மூத்தவரான மூஷிகவாகனன் அண்ணாவரின் அனுக்கிரகத்தினால் உன்னையான் மணர்ந்தேன் உனது ஹிருதயத்தில் யிருக்கும் யொளியை கண்டியான் ஆனந்தம் கொண்டேன் அடி கண்ணே.

பொது வசனம். சுப்பிரமண்யருக்கும் வள்ளிநாயகிக்கும் காந்தர்வ விவாகம் நடைபெருகின்றது பிறகுவேடுவர் சண்டைசெய்து மடிந்து மீண்டும் உயிர் பெற்றெழுந்து வள்ளிநாயகியை சுப்ரமண்யருக்கு விவாகம் புரிந்து கழுகுமலைக்கு அனுப்புகின்றனர்.

சீன் 12.] [இடம் கழுகுமலை.

வள்ளிதெய்வானை சமேதராய் சாக்ஷாத் சுப்ரமண்யக் கடவுள் மயில் மீதமர்ந்திருக்கின்றனர் சகலர்களும் சூழ்ந்திருக்கின்றனர்.

ஆனைமுகன் வாழ்க ஐங்கரன் வாழ்க ஆறுமுகன் வாழ்க
ஹரிபிரம்மன் வாழ்க மலை நீலி வாழ்க
மலையரசன் வாழ்க நம்பிராஜன வாழ்க
நங்கைமோகினி வாழ்க கலைவாணி வாழ்க
கருதும் யெமது குரு சங்கரதாசன்வாழ்க
சரபமுத்து சாமிவாழ்க சரபகவி சா சு சங்கலிங்கம்
வாழ்க முத்தமன் க்ஷேத்திர மே எல் விநாயகமூர்திவாழ்க
களிப்பிடன் அச்சிட்ட கன்னிப்பத்தூர்
கண்ணப்ப முதலிவாழ்க நாடகத்தில் நடித்திவரும்
நங்கை டி ஆர் ராஜலக்ஷ்மிவாழ்க
நாகபூஷணம் வாழ்க நானிலம் புகழ்ந்திடும் திருச்செந்தூர்
சக்கரவர்த்தி டி. ஆர். வெங்கடேசன் வாழி வாழியே

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ வள்ளித் திருமணம்

முற்றுப்பெற்றது.

...த்தக விளம...

பெரிய எழுத்து கிஷுசுகள்.

	ரூ.	அ...
பெ. பாரதம்படம் 4-வாலியம்	10	0
பெ. கந்தபுராணம் வசனம்	4	0
பெ. ஆதிபர்வம்	1	0
பெ. விராடபர்வம்	1	8
பெ. இராமாயணம் படம்	4	0
பெ. ராமர் அஸ்வமேதயாகம்	1	[illegible]
பெ. விக்கிரமாதித்தன் கதை படம்	1	0
,, திக்கு காலிகோ பைண்டு	1	8
பெ. 32-பதுமைகதை	0	12
பெ. நளன் கதை	0	6
பெ. மதனகாமராஜன் கதை	0	8
பெ. தேசிங்குராஜன் கதை	0	6
பெ. மயிலிராவணன் கதை	0	8
பெ. குலோபகாவலி கதை	0	8
பெ. நல்லதங்காள் கதை	0	4
பெ. சிறுத்தொண்டபத்தன் கதை	0	6
பெ. மதுரைவீரசுவாமி கதை	0	4
பெ. சித்திராபுத்திரன் கதை	0	6
பெ. ஆரவல்லி சூரவல்லி கதை	0	6
பெ. கோவிலன் கதை	0	6
பெ. கருடபுராணம்	0	6
பெ. கிருஷ்ணன் தூது	0	6
... ஏணியேற்றம்	0	4

கண்ணப்ப முதலியார்

...யக்கன் தெருவு, பார்க்டவுன் சென்னை.

...n Press, Madras.